
# பூமகள்




**Miss. M. P. Benedict**
**Vice Principal**

HOLY FAMILY CONVENT
DATE 16/6/2016
JAFFNA

# பூமகள்

யாழ் திருக்குடும்ப கன்னியர் மடம் தேசிய பாடசாலையில்

21 வருடங்கள் ஆசிரியராக, பகுதித் தலைவராக,

உப அதிபராக பணியாற்றிய

**செல்வி மேரி பூபதி பெனடிக்ற்**

அவர்களின் சேவைச் சிறப்பு மலர்


வெளியீடு

யா/திருக்குடும்ப கன்னியர் மடம்

தேசிய பாடசாலை

யாழ்ப்பாணம்.

செல்வி **M.P.**பெனடிக்ற் அவர்களின் வாழ்க்கைக்குறிப்பு

- யாழ்ப்பாணம் குருநகரை பிறப்பிடமாகக் கொண்டு 18.06.1956அன்று பிறந்தார்.
- தந்தையார் பெயர் பெனடிக்ற், தாயார் பெயர் மக்டலின்.
- இவர் தனது பாடசாலைக் கல்வியை யா/சென் ஜேம்ஸ் மகளிர் கல்லூரியிலும் பின்னர் மன்/சென் சேவியர் பெண்கள் கல்லூரியிலும் கற்றார்.
- இவர் கலைமாணி பட்டத்தை பெரதெனியா திறந்தபல்கலைக்கழகத்திலும், பட்டப்பின் கல்வி டிப்ளோமா, முது கல்வியியல்மாணி பட்டங்களை யாழ்/ பல்கலைக்கழகத்திலும் பெற்றார்.
- 16.05.1977 அன்று ஆசிரிய நியமனத்தை பெற்று 17.06.2016வரை தனது ஆசிரிய பணியை இனிதே நிறைவேற்றினார்.

  இவரது சேவைவிபரம் வருமாறு

  1.யா/கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயம்
  16.05.1977-31.12.1981

  2. மன்/சென் சேவியர் பெண்கள் கல்லூரி 01.01.1982-31.03.1989

  3. யா/திருக்குடும்ப கன்னியர்மடம் 1989-1995

  4. மன்/ஆண்டாங்குளம் றோ.த.க.பாடசாலை

  5. மன்/முருங்கன் மகா வித்தியாலயம்

  6. மன்/பெரியமடு மகா வித்தியாலயம்

  7. மன்/ஆண்டாங்குளம் றோ.த.க.பாடசாலை

  8. மன்/தேவன்பிட்டி றோ.த.க.பாடசாலை

  9. மன்/இலுப்பக்கடவை அ.த.க.பாடசாலை

  10. யா/திருக்குடும்ப கன்னியர்மடம் 2002-.2016

- உப அதிபராக

  யா/திருக்குடும்ப கன்னியர்மடம் 2010-2016

# அதிபரின் ஆசிச்செய்தி

யாழ் மாவட்டத்தில் கத்தோலிக்க பாரம்பரியங்களோடு கல்வி கலை கலாச்சார விழுமியங்களை இனிதானமுறையில் வளமோடு கற்பித்து வருகின்ற பாடசாலைகளில் எம் யாழ் திருக்குடும்ப கன்னியர்மட தேசியபாடசாலை குறிப்பிடத்தக்க இடத்தை வகிப்பதாகும். சமுதாய நெறிபிறழ்வுகளின் மத்தியில் வாழும் மாணவர் சமூகத்தை ஒழுக்கப் பண்புடனும் இறைபக்தியிலும் வளர்க்க இப்பாடசாலை எடுக்கும் முயற்சிகள் பல. இத்தகைய பல முயற்சிகளுக்கு ஊன்று கோலாகவும் உறுதுணையாகவும் உடன் இருந்து உழைத்தவர் தான் எமது பிரதி அதிபர் செல்வி.மேரி பூபதி பெனடிக்ற் அவர்கள்.

21 ஆண்டுகளாக இக்கல்விக்கூடத்தில் கற்றுயர வந்த பல மாணவச் செல்வங்களின் வாழ்வு உயர, செழிக்க தன்னை உரமாக்கிய ஒரு அர்ப்பணப் பெண் தான் எமது பிரதி அதிபர் செல்வி.மே.பூ.பெனடிக்ற் அவர்கள். அயராத உழைப்பு, பணிக்குப் பிரமாணிக்கம், பாடசாலைக்கு விசுவாசம், பிறரில் அக்கறை, கடமையில் கண்ணியம், நேரம் தவறாமை, இறைப் பற்று, பாரம் பரியம் பேணுவது, கவனம் போன்ற இன்னோரன்ன பண்புகளை இவர் பால் அடுக்கிக் கொண்டே போகலாம்.

பாடசாலை மீதும் சகஆசிரியர் குழாம் மீதும் மாணவர்கள் மீதும் கொண்ட தனிப்பட்ட அக்கறை அவரது தனிச் சிறப்பாகும் இவரது அர்ப்பணமான பணி வாழ்வு துய்மையான வாழ்வு சமுகத்திற்கும் உடன் வாழ்வோருக்கும் ஒரு நல்ல எடுத்துக்காட்டாகும்.

மடத்து வீதி முதல் மாட்டின்வீதி வரை இந்த மெல்லிய உருவம் எத்தனை தடவைதான் நடை பயிலும் அனைத்து மாணவர்களின் இயல்பு, பின்னணித்தேவை, துடுக்கு என அனைத்தையும் நன்கறிந்து பதிந்து வைத்துள்ள ஒரு நடமாடும் கணினி இவர் நிதானமானவார்த்தைகள், நேர்த்தியான எண்ணங்கள், கண்டிப்பான செயற்பாடுகள், அன்பான அரவணைப்பு இவை யாவும் இவருக்கே உரித்தான தனிப் பண்புகள்.

எனது சிந்தனைகளுக்கு செயல்கொடுத்து அதை நிறைவுறச் செய்யும் நல்லதொரு துணை அதிபர். எப்போதும் எதையும் இறை துணையுடன் ஆரம்பிக்கும் நல்ல இறை நம்பிக்கையாளரிவர். .தன்னலம் மறந்து பாடசாலை முன்னேற்றம் ஒன்றையே கருத்தாய்க் கொண்டவர். நன்று நன்று நம்பிக்கைக்குரிய நல்ல ஊழியனே என்ற யேசுவின் வாக்கிற்கு உரித்துடையவர்.

பிரதி அதிபர் சேவையில் இருந்துதான் ஒய்வு பெறுகிறாரே தவிர நற்பணிகளில் இருந்தல்ல. ஆகவே இவர் தனது ஒய்வு காலத்தில் உடல் நலனும் இதய அமைதியும் பெற்று மகிழ்வுடன் வாழ என் இதயம் நிறைந்த ஆசி கூறி இறைவனை பிராத்தித்து நிற்கிறேன்.

வாழ்க வளமுடன்

இறையாசீர்

அருட்சகோதரி அன்ரனிற்ரா மாற்கு

அதிபர்

யா/ திருக்குடும்ப கன்னியர் மடம்

# வாழ்த்துச்செய்தி

வங்கவாரியின் முழங்கொடும் சங்கத்தமிழ்மணம் கமழ் வழக்கோடும் சீரோடும் சிறப்போடும் எழிலுறு யாழ்நகரின் உயர் ஒழுக்கமும், கல்வியும் தன் சீர் நடையெனத் திகழ் மணிமகுடமாய் திருக்குடும்ப கன்னியர் மடத்தின் திகழ் முத்தென ஒளிர்ந்துநின்று ஓய்வுபெறும் உபஅதிபராம் செல்வி. மேரி பூபதி பெனடிக்ற் ஆசிரியர் அவர்களின் பணி, நன்றி நினைந்து வாழ்த்துவதில் பேருவகை அடைகின்றேன்.

பள்ளியின் சீர் நடைக்கும், பண்பாட்டின் விதிகளுக்கும் தன்னை அர்ப்பணித்து துறவற விழுமியங்களை தனதாக்கி அறநெறியில் மாணாக்கரை உருவாக்கிய தருவாய் வளர்ந்து நின்று நிழல் பரப்பிய தங்களின் சேவை போற்றுதலுக்கு உரியது. கற்றல், கற்பித்தலின் உயர்நிலை பணியாற்றியது மட்டுமன்றி பாடசாலையின் மரபுவழி விழுமியங்களை மனதிற் கொண்டு இறை அனுபவத்தினால் பணிநிறைவு கண்டு பணிசெய் தளமே தன் உயிரதாய் பண்டுதொட்டு இன்றுவரை பணியாற்றும் பாங்கு சிறப்புறு செயலாகும்.

மறையுடன் நிறைவாழ்வையும் மாணாக்கருக்கும், பள்ளிக்கும் குறையற வழங்கி திருவுடை தளமாய் திருக்குடும்ப கன்னியர் மடம் திகழ வருமுயர் துன்பம் களைந்து இருவிழிக்கல்வியும் ஒழுக்கமும் என நினைத்து உருவாக்கும் தருவாய் திகழும் அன்பிற்கும் பெருமதிப்பிற்கும் உரிய உங்களை இறையாசீரால் நிறைபெற்று வாழ வாழ்த்தி நிற்பதில் பெருமகிழ்வடைகிறேன்

உங்களுடைய பணிக்காலத்தில் பாடசாலைக்குச் செய்த பணிகளை நினைவு கூரும் இவ்வேளையில் உங்களுடைய பணி வாழ்வானது சிறப்புற நடைபெறுவதற்கு பெரும் உதவி புரிந்த இறைவனுக்கும் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளோம். மேலும் உங்களை இப்பாடசாலையில் பணியாற்ற அழைத்து ஆசீர்வதித்த இறைவன் இனி வரும் காலங்களிலும் அந்த ஆசீரை உங்களுக்கு வழங்கி உங்களைப் பராமரிக்க இறையாசீர் வேண்டுவதில் பங்கு கொள்வதை நினைத்து மகிழ்வடைகிறேன். இறைவன் ஆசீர் என்றும் உங்களோடு இருப்பதாக.

அருட்தந்தை **R.C.X** நேசராஜா
யாழ் மறைக்கோட்ட முதல்வர்
பங்குத்தந்தை, யாழ் மரியன்னை பேராலயம்

# துடிப்புள்ள சிறந்த நிர்வாகி

செல்வி மேரி பூபதி பெனடிக்ற் திருக்குடும்ப கன்னியர் மட பாடசாலையில் 1989ல் ஆசிரியராக இணைந்துகொண்டவர். அவ்வேளை நான் பாடசாலையின் அதிபராக பொறுப்பேற்றுக்கொண்ட அண்மைக்காலம்.

மிகவும் துடிப்புடனும், விருப்புடனும் இவர் கற்பித்தலில் ஈடுபடுவதை ஆரம்பமுதலே கண்டேன். அத்துடன் பாடசாலையின் பல்வேறு செயற்பாடுகளிலும் தானாகவே முன்வந்து கைகொடுக்கும் இவரது ஈடுபாடானது தான் ஓய்வு பெறும் காலம் வரையிலும் காணப்பட்டது. இதனால் எனது பணிக்காலத்தில் மிகவும் நிர்வாகத்துடன் ஒத்துழைப்பு வழங்கிய நல் ஆசிரியராக இவர் விளங்கினார். 140வது ஆண்டு நிறைவு பெருவிழா கொண்டாடப் பட்ட வேளையில் இவரது உழைப்பு அதில் ஆழமாக காணப்பட்டது.

இன்று தனது கல்விப் பணியை நிறைவுசெய்து உபஅதிபராக ஓய்வுபெறும் செல்வி.மே.பூ.பெனடிக்ற் சிறந்த உடற் சுகத்துடனும், மன மகிழ்வுடனும் பல்லாண்டு வாழ வேண்டுமென வாழ்த்தி இவரது தொடரும் பணிகளில் இறைவனின் ஆசீர் என்றென்றும் நிலைத்து நிற்க வேண்டும் எனவும் பிரார்த்திக்கின்றேன்.

முன்னாள் அதிபர்.

அருட் சகோதரி யோலண்ட் மத்தியாஸ்.

# செல்வி பெனடிக்ற் நல்ல ஆசிரியத்துவத்தின் ஓர் எடுத்துக்காட்டு

இந்த நல்லாசிரியை 2004ல் இருந்து தான் எனக்கு அறிமுகமானவர். இவரை நான் முதன் முதலில் கண்ட போதே இவரிடம் அகத்தூய்மை, அகன்ற பார்வை, கடமையே கண் என்ற போக்கு, ஆசிரிய அர்ப்பணத்தின் ஆழம் , தன்னடக்கம், இறை உறவின் நெருக்கம், அருட்பொழிவு நிறை வாழ்வு என் கண்களில் பட்டுத்தெறித்தன.

தனது 39 வருட ஆசிரியப் பணியில் 21 வருடங்களை யாழ் திருக்குடும்ப கன்னியர்மடப் பாடசாலையிலும் யாழ் திருக்குடும்ப கன்னியர்மட தேசிய பாடசாலையிலும் செலவிட்டவர். இப்பாடசாலையில் பல நடிபங்குகளை கச்சிதமாக ஆற்றியவர். மாணவிகளுக்கு ஓர் நல்ல ஆசானாக, ஏழை மாணவிகளைப் புரிந்து அன்பு காட்டுவதில் நல்லதோர் தாயாக, கரிசனையுடன் வழிகாட்டுவதில் ஓர் நல்ல தந்தையாக, தவறிழைக்கும் மாணவிகளுடன் உடன்நடந்து அவர்களை நேர் வழியில் நெறிப்படுத்தும உற்ற நண்பியாக, அவர்கள் நோயுறும் பொழுது நல்ல தாதியாக, அவர்கள் வாழ்வில் உயர்நிலை அடைய உயர்த்தி விடும் ஓர் ஏணியாக பாடசாலையில் திகழ்பவர். அத்துடன் தலைமை மாணவிகளையும் மாணவத்தலைவிகளையும் உருவாக்குவதிலும் தலைமைத்துவப் பயிற்சிகளையும் வழங்குவதிலும் கை தேர்ந்தவராகவும் பாடசாலையில் துலங்கியவர்.

Miss Benedict என்றால் ஆசிரியக் குழாம் மத்தியிலும் மாணவிகள், சிற்றூழியர், பெற்றோர்கள், மத்தியிலும் ஒரு தனிமதிப்பு உண்டு. ஓர் நல்ல ஆசிரியையாக பகுதித் தலைவராக உபஅதிபராக நான் பாடசாலையை முகாமை செய்த காலத்தில் தன் ஆளுமையால் மனித மனங்களில் இடம் பிடித்தவர். இவர் யாரிடமும் அநாவசியமாக பேசமாட்டார். உண்மையும், நீதியும், அன்பும், பரிவிரக்கமும், பொறுப்புணர்வும் இவரின் பணி வாழ்வை என்றும் அணி செய்த அணிகலன்களே ஆகும்.

இவர் பாரதி கண்ட புதுமைப் பெண் போன்று நிமிர்ந்த நடையும், நேர் கொண்ட பார்வையும், நிலத்தில் யாருக்கும் அஞ்சா நெறிமுறையும் கொண்டவர் இவரிடம் தெளிந்த ஞானம் இருப்பது இவரின் வாயிலிருந்து உதிர்க்கும் நல் வார்த்தைகளிலிருந்து ஞானமுள்ளவர்கள் மட்டுமே உய்த்துணர்வார்கள். இன்றைய காலத்தில் ஞானமுள்ள மனிதர்களைக் காண்பது அரிதிலும் அரிது. இந்த ஆசிரியையின் செவ்நெறிகள் எல்லாம் முற்காலத்தில் வெளிநாடுகளிலிருந்து வந்து கல்விப்பணி ஆற்றிய ஆசிரியத்துறவிகளின் செல்நெறிகள் போல் சில வேளைகளில் இருக்கும்.

தன் பாடசாலை வாழ்வில் பகுதித் தலைவராகவும் உபஅதிபராகவும் பணி செய்த காலத்தில் நவீன ஆசிரியர்களால் வந்த சவால்களுக்கு வீரத்துடன் முகம் கொடுத்து சொல்ல வேண்டியதை திறந்த மனதுடன் சொல்லி சலனமற்ற தன் பிரசன்னத்தால் பாடசாலை முகாமைத்துவத்தை இலகுவாக்க தனக்கு முன் 30வருடங்களாக ஆசிரியராக பகுதித்தலைவராக உபஅதிபராக இருந்த திருமதி சித்ரா இராஜரட்ணத்துடன் இணைந்து கடினமாக உழைத்த ஓர் சிறந்த உழைப்பாளி.

இவரிடம் கூரிய நுட்பமான சமூகப்பார்வை, சிறந்த தொடர்பாடல் திறன், ஊக்குவிக்கும் உயர்ந்த மனம், அபாயமான நிலைகளை சமாளிக்கும் திறன், மனிதத்தை மதித்தல், தெய்வபயம் நிறைந்த அறிவும் காணப்படும்.

கல்வியால் சரியான உள்ளீடுகளை அளித்து பெறுமதியான வெளியீடுகளை வருவித்து இந்த நல்ல ஆசானை இழப்பது பாடசாலையைப் பொறுத்த அளவில் ஈடுசெய்ய முடியாத ஒன்றாகும். இதை கல்வி ஞானம் நிறைந்தவர்களே உணருவார்கள் Miss பெனடிக்ற் ஓய்வு பெறும் உங்களை அன்புடனும், செபத்துடனும், நன்றியுடனும், இறையாசியுடனும் வாழ்த்துவதில் பெரு மகிழ்ச்சி அடைகிறேன்.

**Sr.** நெவிஸ் லடிஸ்லாஸ்
ஓய்வு நிலை அதிபர்
திருக்குடும்ப கன்னியர் மடம்
தேசிய பாடசாலை

# என் "இனிய உறவின்" நிலைத்துவிட்ட நினைவுகள்

யாழ் திருக்குடும்பக் கன்னியர் மடத்தில் நான் ஆசிரியராக இணைந்த ஒரு வருட காலத்தின் பின் 1980ல் ஆசிரியப் பயிற்சிக் கலாசாலையிலிருந்து கற்பித்தல் பயிற்சியை மேற்கொள்ளத் திருக் குடும்பத்துக்குள் வந்தவர் செல்வி.மேரி பூபதி பெனடிக்ற். அக்காலத்தில் கற்பித்தல் பயிற்சியை ஒரே பாடசாலையில் ஒரு வருட காலத்திற்கு மேற்கொள்ள வேண்டும் என்பது ஆசிரிய பயிற்சிக் கல்வியின் விதிமுறையாக இருந்தது.

அந்த ஒரு வருட காலத்திலேயே என் "பெனா"வுடன் நான் நட்புடன் நெருங்கிப் பழகும் ஒரு ஆசிரியையாக இருந்தேன். இளைமைத்துடிப்பும் பாடசாலை இணைப்பாடவிதான செயற்பாடுகளுக்காக இருவரும் கூட்டுச் சேர்ந்தமை எங்களை மேலும் புரிதலுக்கு இட்டுச் சென்றது. ஆசிரியப்பணிக்கே உரிய நடை, உடை, ஆற்றல், பல்திறன்கள், துடிப்பு, தேடல், பொறுமை, நிதானம், பேச்சாற்றல், எந்தவித எதிர்பார்க்கைகளும் இல்லாத சேவை மனப்பாங்கு, எல்லாச் செயல்களிலும் ஒருமுறைமை, கடவுள்பக்தி போன்ற பண்புகள் நிறைந்த ஒரு மெல்லிய தோற்றமுடையவரே அன்று நான் கண்ட மேரி பூபதி பெனடிக்ற். நான் வயதளவில் மூத்தவராக இருந்தாலும் என் ஆசிரியப் பணி வாழ்வுக்கு அவளை ஒரு முன்மாதிரியாகக் கொள்ளச் செய்தது. இன்று முப்பத்தொன்பது ஆண்டுகள் உருண் டோடித் தன் ஆசிரியப் பணியிலிருந்து ஒரு நல்லாசிரியை ஓய்வு பெறப்போகிறாள் என்பதை என் கண்களில் காட்சியாகவோ, நெஞ்சத்தில் நினைவாகவோ என்னால் நிறுத்திப்பார்க்க முடியவில்லை.

ஆசிரிய கற்பித்தல் பயிற்சியை முடித்து ஒரு வருடத்தின் பின் எம் கல்லூரியை விட்டு வெளியேறிய "பெனா" இடம் மாற்றம் பெற்று 1989ல் பட்டதாரி ஆசிரியையாக மீண்டும் எங்கள் கல்லூரியில் இணைந்தாள். கலைத்துறை சார்ந்த கற்பித்தற்பணி, இணைப்பாடவிதான செயற்பாடுகள், கல்லூரி சார்ந்த சமூகப்பணிகள், கல்லூரி இல்லப்பிரிப்புக்கள் இவை கூட என்னையும் பெனாவையும் எக்காலத்திலும் பிரிக்கவே இல்லை. இச் சந்தர்ப்பங்களில் எல்லாம் சொற்களை அளவு சார்ந்தும் நாகரிகமாகவும் பிரயோகிக்கும் அவளது பேச்சாற்றல், தான் விரும்பாதவற்றை வெளிக்காட்டும் முறையில் காணப்பட்ட நாகரிகம் அதில் அவளது தனித்துவங்களைக் கண்டேன்.

எமது காலத்தில் தினமும் பணிக்கு முதலாவதாக சமூகமளித்து பணி முடித்து இறுதியாக கல்லூரியை விட்டு வெளியேறும் ஒரு ஆசிரியர் யாரென்றால் அது செல்வி. மேரி பூபதி பெனடிக்ற் தான். கல்லூரிக் கடமைகளை, தன் அன்றாட வாழ்வாக்கி இன்றுவரை உழைத்துத் தேய்ந்தவள். மாணவரின் பல்வேறு தேவைகளை இனம் கண்டு அவை நிறைவடைய வழி கண்டவர். சக ஆசிரிய நண்பர்களுக்கே தெரியாது, எத்தனையோ ஏழை மாணவர்களின் தேவைகளை இன்றுவரை பூர்த்தி செய்து வந்த ஒரு பிள்ளை நேய ஆசிரியர் என்பது.

எனது கல்லூரிப் பணிகளில் என் பணிச் சுமைகளை என்னுடன் தாங்கி உதவியவர். மாணவத் தலைவர்கள் மன்றத்தின் பொறுப்பாசிரியராக இருந்த போது என்னுடன் துணைப் பொறுப்பாசிரியராக இருந்து தோள் கொடுத்து நின்றவள். அவ்வேளை மாணவர்களின் பண்புசார் நடத்தைகளை எவ்வாறு வழிகாட்டினார் என்பதைக் கண்டேன். இதே போன்று கல்லூரியின் வருடாந்த நேரஅட்டவணை, வருடாந்த வேலைத்திட்டமிடல் போன்ற எனது பொறுப்புகளுக்கு உதவி ஆசிரியராக இருந்து என் பொறுப்புக்களை குறித்த காலத்தில் நிறைவேற்றவும் பாராட்டுப் பெறவும் துணை நின்றவர்.

எமது உறவு கல்லூரி எல்லைக்கப்பாலும் என் குடும்ப உறவுகள்வரை நீடித்தது. எனது பிள்ளைகள் இருவரும் திருக்குடும்பக் கன்னியர் மடத்திலேயே கல்வி கற்றமையால் அவர்களின் வகுப்பு ஆசிரியையாகவும் தமிழ்ப் பாட ஆசிரியராகவும் பல தடவைகள் இருந்து அவர்களின் அறிவு, ஆளுமையிலும் மாற்றங்களை ஏற்படுத்தியவர்.

நாட்டு நிலைமைகள் 1995ல் இடப் பெயர்வு என்ற மாற்றத்தை ஏற்படுத்தி எம்மைப் பிரித்த போதும் அந்த இறைவன் சித்தம் போலும், மீண்டும் 2002ல் இவரைத் திருக்குடும்பத்திற்கே கொண்டு வந்து சேர்த்தார். நான் கல்லூரியின் உபஅதிபர் பொறுப்பை ஏற்க நேர்ந்த போது உயர்தர வகுப்புக்களின் பகுதித் தலைவராக இருந்து, எனது பணிப் பொறுப்புக்களை நிறைவேற்ற உதவியவள். பதட்டமின்றி நிதானமாக தீர்மானம் எடுத்தல், அது குறித்து முறைமை ஒன்றை வகுத்து, அதன்வழி செயற்படல் போன்ற அவளது செயற்பாடுகள் அவளது நிர்வாகத்திறன்களை எனக்கு உணர்த்திற்று. இயற்கையாகவே அவளிடம் காணப்பட்ட "தேடல்" அவளை இன்று முதுகல்விமானிப் பட்டத்திற்குரியவளாக உயர்த்தி நிற்கின்றது.

எனது தாயாரின் மறைவிற்குப் பின் தாய் தந்தையின் இழப்பு எனது தம்பி, தங்கை இருவரதும் வெளிநாட்டு குடியேற்றம் என் வாழ்வில் மிகப் பெரிய வெற்றிடம் ஒன்றை உருவாக்கி இருந்தது. அச் சந்தர்ப்பத்தில் தான் என்னுடன் என் வீட்டு உறவாக கலந்தாள். என் "பெனா" எனக்கேற்பட்ட உறவு வெற்றிடத்தை நிரப்பியவளாக, என் சுக துக்கங்கள், நன்மை தீமைகள் எல்லாவற்றிலும் நான் நின்று நிலைக்க ஊன்று கோலாக இருந்தாள், இருக்கிறாள்.

எம் கல்லூரி அவளிடம் தான் பெற்ற சேவைகளுக்கு சன்மானமாக தனது "தேசிய பாடசாலை" என்ற பரிணாம வளர்ச்சியின் முதல் "உபஅதிபர்" என்ற பெருமையை அவருக்கு வழங்கி நிற்கிறது. அதைப் போன்று நானும் எனது குடும்பமும் எதிர்பார்க்கைகள் எதுவுமில்லாது அவளால் எமக்காக வழங்கப்பட்ட சேவைகளுக்கு எதைக் கைம்மாறாக வழங்க முடியும்? என என் மனம் அங்கலாய்க்கிறது.

எல்லோரையும் போன்று நானும் தனது பணிகளை செவ்வனே செய்து ஓய்வுபெறும் இவளை இறைவன் நிறைவோடு ஆசீர்வதிக்கவும் நீண்ட ஆயுளையும், நல்லாரோக்கியத்தையும் வழங்கவும் கல்விப் பணியில் ஓயாது பணி செய்யவும் ஆசித்து வாழ்த்தி நிற்கின்றேன்.

திருமதி சித்திரா இராஜரட்ணம்

ஓய்வு பெற்ற முன்னாள் உப அதிபர்

# பாடசாலைப் பற்றுடன் பணிபுரிந்தவர்

செல்வி. மேரி பூபதி பெனடிக்ற் நீண்ட காலமாக யாழ் திருக்குடும்ப கன்னியர் மடத்தில் கல்விப் பணியாற்றி இன்று அகவை அறுபதில் ஓய்வு பெறுகின்றார். ஆசிரியராக, உபஅதிபராக இப் பாடசாலையில் இவர் பணியாற்றிய காலப் பகுதியில் இவரது பல் பரிமாண செயற்பாடுகள் பாடசாலை மீது இவருக்கு இருக்கும் ஆழமான பற்றினை வெளிப்படுத்தி நின்றதனை என்னால் உணர முடிகிறது. 1989ல் இப் பாடசாலையில் ஆசிரியராக நியமனம் பெற்று வந்தது முதல் 2016 ஜுன் மாதத்தில் ஓய்வு பெறுவது வரை 7 வருட இடப்பெயர்வு தவிர்ந்த 20 வருடங்கள் இவர் பாடசாலை முகாமைத்துவத்துடன் உண்மையான விசுவாசமான உறவினை பேணி ஒத்துழைப்புடன் செயற்பட்டு வந்தள்ளார். ஒரு பாடசாலையின் ஆரோக்கியமான வளர்ச்சிக்கு அதிபருடன் இணைந்து ஆசிரியர்களும் உழைக்கும் போதுதான் வெற்றி சாத்தியமாகும். அந்த வகையிலே இப் பாடசாலையில் நான்கு அதிபர்களுக்கு கீழ் பணியாற்றி ஓய்வு பெறும் உபஅதிபர் செல்வி. மேரி பூபதி பெனடிக்ற் அவர்கள் நிர்வாகத்திற்கு பக்க பலமாக இருந்து உழைத்துள்ளார். என்பதுடன் பாடசாலையின் சகல செயற்பாடுகளிலும் முழு மூச்சுடன் தன்னை ஈடுபடுத்தி பொறுப்புடன் தனது கடமைகளை நிறைவேற்றியவர் எனக்கூறின் அது மிகையாகாது. கலைப்பட்டதாரியாக கல்வித் தகைமையுடன் பட்டப்படிப்பின் பின் கல்விடிப்ளோமா, கல்வி முதுநிலைமானி ஆகிய தொழிற்தகை மைகளையும் கொண்டு தன்னை வளப்படுத்திக் கொண்டவர். தமிழ் மொழியைப் பிரதான பாடமாகக் கொண்டு சிறப்பாக கற்பித்தலில் ஈடுபட்டவர். இவரது தமிழ்மொழிப் புலமையுடன் தமிழில் சரளமாக கையாளும் மொழிவளமும் குரல் வளமும் இவரது பேச்சாற்றலுக்கு கைகொடுத்து நின்றமை கண்கூடு. அத்துடன் கற்பிக்கும் பாடத்தில் ஐயமற்ற அறிவு, வகுப்பறைக்கட்டுப்பாடு, கண்டிப்புடனான கற்பித்தல் போன்றவை இவரது ஆசிரியர் பணிக்கு கொருத்தமானதாக விளங்கின.

ஆசிரியராக கடைமையாற்றிய வேளையில் பகுதித்தலைவர் பதவியினையும் பொறுப்புடன் நிறைவேற்றியவர். குற்பித்தல் செயற்பாட்டிற்கு மேலதிகமாக இணைப்பாடவிதான செயற்பாடுகள், காலை ஒன்றுகூடலின் போதான நல்லுரைகள், வெள்ளிக்கிழமைத் தியானம், தமிழ்மொழித்திறன் போட்டிகளின் போது மாணவர்களைத் தயார்படுத்தல், முத்தமிழ்வழா, இல்லமெய்வன்மைப்போட்டி போன்றவற்றிலும் முனைப்புடன் செயற்பட்டு வெற்றிக்கு உழைத்தவர்.

மாணவர்கள் கல்வியுடன் ஒழுக்கத்திலும் சிறந்து விளங்க வேண்டும் என்பதில் மிகவும் அக்கறை கெபண்டவர். நீண்ட காலம் பாடசாலை முகாமைத்துவக் குழுவிலும், ஒழுக்காற்றுக் குழுவிலும் உறுப்பினராக பொறுப்புடன் நடந்து கொண்டவர். எக்காரணம் கொண்டும் மாணவர் தொடர்பான அல்லது ஒழுக்காற்றுக் குழுவினருக்குவரும் முறைப்பாடுகள் தொடர்பான விசாரணைகள் பற்றிய சிறிய தகவல்களும் கூட வெளியேவராது இரகசியம் பேணுவது இவரது சிறந்த பண்புகளுக்கு எடுத்துக் காட்டாகும்.

மாணவர்களுடன் மிகவும் கண்டிப்புடன் நடந்துகொள்வார். மாணவர்களது கல்வி, ஒழுக்கம், சீருடை, வரவு போன்றவைகளில் அதிக கண்டிப்புடன் கவனம் செலுத்திய போதிலும் ஒருபோதும் அவர்களைக் கண்டித்தது கிடையாது. அவர்களுடன் நல்லுறவுடன் பேசி பெற்றோரை சந்தித்து

அவர்களது தேவைகள் அறிந்து நிறைவேற்றி கொடுப்பதுடன் எப்போதும் அவர்களைக் கண்காணித்து வளர்ப்பதில் தாயாக செயற்பட்டவர்.

'தெரிதலும் தேர்ந்து செயலும் ஒரு தலையாச்சொல்லலும் வல்லது அமைச்சு'- எனும் வள்ளுவன் வாக்குக்கமைவாக செய்ய வேண்டிய காரியங்களை ஆராய்ந்து, அதற்குரிய வழிவகைகளைத் தேடியறிந்து செயற்படுவதும், துணிவாக கருத்துக்களை சொல்வதிலும் வல்லதே அமைச்சு என சொல்லிலும் செயலிலும் செய்து

காட்டியவர். எதையும் மேலோட்டமாக எடுத்துக் கொள்ளாது ஆழமாக சிந்தித்து, கிரகித்து கருத்துக்களை வெளியிடுவதுடன் அதற்கான தெளிவான விளக்கத்தை யும் கூறக்கூடியவராகையால் தனது முடிவுகளை மாற்றியமைக்காது உறுதியுடன் தொடரும் தகைமை கொண்டவர்.

செல்வி. மேரி பூபதி பெனடிக்ற் இப்பாடசாலையில் பணிபுரிந்த காலங்களில் இப்பாடசாலையில் நிகழ்ந்தேறிய பாரிய நிகழ்வுகளான 140வது, 150வது ஆண்டு நிறைவு விழாக்கள், தேசியப்பாடசாலை யாக தரமுயர்த்தப்பட்ட நிகழ்வு, பாடசாலையின் ஓய்வு பெற்ற மூன்று அதிபர்களது சேவைநலன் பாராட்டு விழாக்கள் போன்றவற்றில் முக்கிய பங்குவகித்து அவற்றினை சிறப்பாக நடாத்த உதவியதுடன் அவ்வேளைகளில் வெளியிடப்பட்ட சகல மலர்வெளியீட்டு குழுவிலும் முக்கிய பங்கு கொண்டு அவை சிறப்பாக வெளிவர உழைத்த பெருமை கொண்டவர்.

தூய்மை, எளிமை, சிக்கனம் போன்ற அரிய பண்புகளைக் கொண்ட செல்வி. மேரி பூபதி பெனடிற் அவர்கள் தனது நேர்த்தியான நடையுடை பாவனைகள் மூலமும் பாடசாலையின் பௌதீகவளகளை பேணுவதில் அவசியமான வளங்களை தேடிக்கொள்வதிலும் காட்டிய அக்கறை மூலமும் அவறை வெளிப்படுத்தி நின்றவர் பாடசாலையின் நிகழ்ச்சிகளுக்கான செயற்குழு (Junction committee)யில் நீண்டகாலம் பொறுப்பாளராக கடைமையாற்றி பாடசாலை நிகழ்ச்சிகளை சிறப்புற செய்த பெருமைக்குரியவர். இவர் நினைத்திருந்தால் தனது வாழ்நாட்காலத்தை எப்படி எப்படியோ மகிழ்ச்சியாக கழித்திருக்க முடியும் ஆனால் எப்படியும் வாழலாம் என்பதை விடுத்து இப்படித்தான் வாழவேண்டும். எனும் கொள்கையுடன் பாடசாலையின் உயர்வுக்காக அர்ப்பணிப்புடன் வாழ்ந்து காட்டியவர். பாடசாலையில் கழித்த பொழுதுகளே அதிகம் எனலாம். நீண்ட கால பாரம்பரியங்களைக் கட்டிக்காக்க வேண்டும். என்ற பேராவலுடன் ஒவ்வொரு விடயங்களையும் கவனத்துடன் கையாண்டு வந்த உபஅதிபர் அவர்களின் பணிக்கு தலை சாய்த்து நன்றி சொல்வதுடன் இவர் தனது ஓய்வுக்காலத்தில் மன அமைதியுடனும் மகிழ்ச்சியுடனும் தனது உறவுகளுடன் நீண்ட ஆயுளுடன் வாழ வோண்டும் என இறைவனைப் பிரார்த்தித்து பல்லாண்டு பல்லாண்டு வளமுடன் வாழ்க என வாழ்த்தி நிற்கின்றேன்.

திருமதி. ஜெ. சிறிஸ்கந்தராஜா
(ஓய்வு நிலை ஆசிரியர்)

## வார்த்தையில் ஊக்கவேகம் செயலில் ஆக்க வேகம் சிந்தையில் நோக்குவேகம் பணியில் பணிவிடை வேகம்

யாழ் திருக்குடும்ப கன்னியர்மட பாடசாலையில் உப அதிபராக இருந்து மணிவிழாக் காணும் செல்வி மேரி பூபதி. பெனடிற் அவர்கள் தனது சேவைக் காலத்தில் ஆரம்ப பிரிவு முதல் உயர்தர பிரிவு வரை மாணவர்களினதும் ஆசிரியர்களினதும் மிகுந்த அக்கறையுடன் செயற்பட்டார். இவர் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு, நிர்வாகத்திறன் மிக்கவராக திகழ்ந்தார். இவர் ஆசிரியர்களையும் மாணவர்க ளையும் திறமை மிக்கவர்களாக சமுகத்தில் திகழ வேண்டுமென நல்மனதுடன் உருவாக்கக் கூடிய தன்மையுடன் வழிநடத்திச் சென்றார். ஆசிரியர்களையும் மாணவர்களையும் அவர்கள் பங்குபற்றக் கூடிய செயற்பாடுகளை இனங்கண்டு பங்கு பற்றச்செய்து போட்டிகளில் வெற்றியீட்டுவதற்கு உதவிக் கரம் புரிந்தார். ஆளுமை விருத்தியில் முகாமைத்துவ திறமைகள் முக்கிய பங்கினை வகிக்கின்றன. இவர் தனது சேவைக்காலத்தில் ஒழுங்குபடுத்தலாலும் ஊக்கப்படுத்தி வழிப்படுத்தலாலும் எமது பாடசாலை பல உயர்ச்சிகளைக்காண வழிவகுத்தார். இவர் நல்மனப்பாங்கு, நுண்ணறிவுடன் செயற்படல், பொறுமை, சமூகபொருத்தப்பாடு, விரைவாகத் தீர்மானம் எடுத்தல் போன்ற விடயங்களை முன்னெடுத்துச் சென்றார். நுான் இந்தப் பாடசாலையில் சேவையாற்றி இருபது வருடங்களில் (2015வரை) கடைசி முன்று வருடங்களும் ஆரம்பப் பிரிவிற்கு அதிபர் வருகைதராத நேரங்களிலும், சரி அதிபர் வந்து போனாலும் உபஅதிபர் வருகை தந்து மாணவர்களின் கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகள் வினைத்திறன் மிக்கதாக அமைய அவ்வப்போது எனக்கு ஆலோசனைகள் கூறுவார். ஆசிரியர்கள் கற்பித்தல் துறையில் விருத்திபெற கற்பித்தல் நடவடிக்கைகளை மேற்பார்வை செய்வதற்காக நேரடியாக வகுப்பறைகளுக்குச் சென்று தாணவர்களின் பயிற்சிக்கொப்பிகளை பார்வையிட்டு மாணவர்களின் அடைவுமட்டங்களை உயர்த்துவதற்கான வழிமுறைகளை எடுத்துக் கூறுவார். ஆரம்பப்பிரிவில் நடைபெற்றுவரும் கால்கோள் விழா, விளையாட்டுப்போட்டி, கற்றல் கற்பித்தல் சாதனக்கண்காட்சி, சிறுதோழியர் சின்னஞ்சூட்டும் வைபவம் சிறப்பாக நடைபெற ஒத்துழைப்பு வழங்குவார். அத்துடன் ஒவ்வொரு வருடமும் நடைபெற்றுவரும் வரும் தமிழ்த்தினப் போட்டிகள், ஆங்கிலதினப்போட்டிகள், சித்திரப் போட்டிகள், சிறுவர் அரங்க நாடகப்போட்டிகளுக்கு ஆரம்பப் பிரிவு ஆசிரியர்கள் மாணவர்களுக்க பயிற்றுவிப்பதுடன் நின்று விடாது உயர்தர வகுப்புக ளில் கற்பித்துவரும் பாடஆசிரியர்களின் உதவியையும் பெற்று மாணவர்கள் போட்டிகளுக்குச்சென்று பாடசாலைமட்டம், கோட்டமட்டம், வலயமட்டம், மாவட்டமட்டம், மாகாணமட்டம் வரை சென்று மாணவர்கள் வெற்றிபெற உதவிசெய்தார். இவர் பாடசாலை நலம்சார்ந்த மாணவர்களின் நலம் சார்ந்த ஒவ்வொரு விடயத்திலும் அறிவு பூர்வமான சிந்தனையோடு ஆக்க பூர்வமாக செயற்பட்டு ஆற்றல் மிக்க சக்தியாக செயற்பட்டு வந்தார். இவர் தனது சேவையிலிருந்து ஓய்வு பெற்றாலும் ஆசிரியர்கள் உள்ளத்திலும் மாணவர்கள் உள்ளத்திலும் என்றும் நிலைத்து நிற்பார். இவர் தனது ஓய்வுக் காலத்தில் இறைவனின் அருளுடன் என்றும் வாழ வாழ்த்துகிறேன்.

திருமதி. ப. ஜெ. பற்றிக்
ஓய்வு பெற்ற ஆசிரியர்
யாழ் திருக்குடும்ப கன்னியர்மடம்

# தாயான வழிகாட்டி

பிறந்த நாளாகட்டும், புதுவருடமாகட்டும், விடுமுறை நாளானாலும் தவறாது வாழ்த்துகின்ற அன்பின் கனிவு;

எந்தவொரு விடயத்திலும் தாயாகி தருகின்ற ஆலோசனைகள்;

கடந்த மூன்று ஆண்டுகளுக்கு மேலாக திருக்குடும்ப கன்னியர்மட ஆசிரிய அனுபவத்தில் நெஞ்சுக்கு நெருக்கமான உறவாக பெனடிக்ற் மிஸ்ஸின் தரிசனம் எனக்கானது.

திருக்குடும்ப கன்னியர்மடம்-தேசிய பாடசாலையில் இரண்டு தசாப்தங்களுக்கும் மேலாக ஆசிரியராக, உபஅதிபராக அவரது சிறப்பான பணி அமையப்பெற்றது. மாணவர்கள் ஆர்வத்தை ஈர்க்கும் அவரது கற்பித்தல் திறனை, யாவரையும் ஒரு குடும்பமாக நோக்கும் அவரது நிர்வாகத்திறனை பலரும் நயந்திடக் கேட்டிருக்கின்றேன். நிர்வாகக் கடமைகளில் அருகிருந்து அவரது மேலான பண்புகளை நயந்திடும் வாய்ப்பு எனக்கு கிடைத்த பேறு என்பேன்.

அவரது சொல்லாடல்கள் எப்போதும் நிதானமானவை. பக்குவமாக அறிவுறுத்தி அனைவரையும் பணிசெய்ய வைக்கும் அவரின் ஆற்றல் தனித்துவமானது.

நேர்த்தியான அவரது உடையலங்காரத்திலிருந்து எப்போதுமே நியாயத்துக்காக உறுதியாக குரல் தரும் அவரின் ரசிகை நான்.

ஒரு பாடசாலை நாட் பொழுதில் காலை வணக்கம் சொல்வதிலிருந்து மாணவர் அரங்குகளில் தரும் அறிவுரைகள் வரை அவருக்கே உரித்தான சொல் அழகு நாள் முழுமையையும் நிறைத்திருப்பன.

அழகிய கவிதைகளைக் கலந்து அவர்பேசும் வார்த்தைகள் மாணவர்களுக்கு மட்டுமான அறிவுரைகள் அல்ல; ஆசிரியர்களாகிய எங்களுக்கும் தான். வாழ் நாள் முழுவதுக்குமான வழிகாட்டி என்பேன்.

பெறுமதியான இந்த திருக்குடும்ப பாடசாலை வாழ்விலிருந்து பெனடிக்ற் மிஸ் ஓய்வு பெறுகின்றார் என்ற செய்தி நெஞ்சுக்கு கனமானது.

தினமும் பாடசாலையில் காலை முகம் மலர அவர்தரும் ‘Good morning’ இனி இல்லை என்பதனை நினைத்துப் பார்க்க முடியவில்லை.

ஆனாலும் எங்கள் திருக்குடும்ப உறவு பிரிக்க முடியாதது; பிரிவற்றது; இறைவனால் ஆசீர்வதிக்கப் பெற்றது. வயதினால் வருகின்ற இந்த ஓய்வுக்குப் பின்னாலும் அவரது வழிகாட்டல்கள் எங்களுடன்

இருக்கும்; எங்களுக்கு அப்பால் விரிந்த சமூகப்பரப்பிலும் அவரது பணிகள் துலங்கிடும் என்ற நினைப்பே எமக்கான ஆறுதலாகும்.

அன்பான பெனடிக்ற் மிஸ்,
நீங்கள் ஒரு மிகச்சிறந்த ஆசிரியர்
மிகச் சிறந்த உபஅதிபர்
அதில் இரண்டாவது வார்த்தைக்கு இடமில்லை

ஆசிரியர்களாகிய எங்களுக்கும்
மாணவர்களுக்கும்
தாயாகி நட்புணர்வுடன்
தந்த உதவிகளை ஒரு நாளும் மறக்கமாட்டோம்.

உங்களது ஆசீர்வாதத்துடன்
அர்ப்பணிப்பான உங்கள் வழித்தடத்தில்
எங்கள் பணி தொடருவோம்.

அர்த்தமும் அழகும் நிறைந்ததாய்
உங்கள்
ஓய்வுக்காலம் அமைந்திட
எல்லையற்ற பரம்பொருளின் பெருங்கருணை
என்றென்றும் உங்களோடிருக்கும்.

எல்லையில்லாத அன்புடன்,
**திருமதி. கௌரி சண்முகலிங்கன்**
ஆசிரியர்,
யாழ். திருக்குடும்ப கன்னியர்மடம் - தேசிய பாடசாலை.

**Dear Miss Benedict,**

On behalf of the Past Pupils' Association UK, I would like to congratulate you on your retirement after 21 long years at the school. During your tenure at HFC Jaffna, the school has been through its fair share of difficulties, especially at a time when the country was plagued by political unrest, however your commitment, dedication, and undying support helped our Alma mater to stand strong and continue to be upheld as one of the most prestigious schools in the country.

The PPA UK send this brief message as a small token of appreciation and gratitude for your many years of hard work and loyal service and we wish you all the very best on your retirement.

**Priyanthi Worthington**

**Secretary, PPA UK**

# தத்தெடுத்த தாய் நீங்கள்

பிள்ளைகளை சமூகமயப்படுத்தும் நிறுவனங்களுள் பாடசாலைமுதன்மை இடம் வகிக்கின்றது என்பது கல்வியலாளர்களின் கருத்தாகும். எனவேதான் பெற்றோர்கள் தமது பிள்ளைகளை கல்வியும் ஒழுக்கமும் பேணிவளர்க்கும் தகைசார் பாடசாலைகளில் சேர்க்ககடும் பிரயத்தனங்களை மேற்கொள்கின்றனர்.

யாழ்ப்பாணத்தின்கண் பாரம்பரியங்களைப் பேணும் ஒழுக்கவிழுமியங்களை இறுகக் கடைப்பிடிக்கும் புகழ் பூத்தபெண்கள் பாடசாலையான யாழ் திருக்குடும்பக் கன்னியர் மடத்தில் கடந்த பன்னிரண்டு வருடங்களாக அர்ப்பணிப்புடனான சேவையை வழங்கி வந்தவர் செல்வி.மேரி பூபதி பெனடிக்ற் அவர்களாவார்.

கடமை, கண்ணியம், கட்டுப்பாடு கொண்டவராய் அன்பு, இரக்கம், கருணைமிகப் பெற்ற கலவையாய் ஆசிரியர் வகிபாகம் அமைந்திருக்க வேண்டும் என்பது சமூகத்தின் எதிர்பார்ப்பு எனில் அதனை நாங்கள் செல்வி. பூபதி பெனடிக்ற் அவர்களிடம் கண்டோம்.

பிள்ளைகளின் தத்துப் பெற்றோரே (Logo parents) ஆசிரியர்கள் என்ற வகிபாகம் ஆசிரியர்களுக்கு உண்டு. பாடசாலைக் களமதில் பெற்றோரும் பிள்ளைகளும் தாய் எனக்காணும் பாசமிகு ஆசானாய் நம்பிக்கை பிறழாமல் நற்செயல்கள் பல புரிந்தும் பிள்ளைகளின் ஒழுக்கம் பேணிவளர்த்துவிட்ட அவர் தம் பணியை எல்லாப் பெற்றோர்களும் என்றும் நினைந்திடுவர்.

நிர்வாகக் கடமைகளில் ஒத்துழைக்கும் உப அதிபர் ஆசிரியர்களுக்கு என்றும் அறிவை வழங்கிடுவார்; சிறந்தமனப்பாங்கை விருத்தி செய்திடுவார்;பிள்ளைகளின் திறமைகள் பெருக களம் அமைத்துக் கொடுத்திடு வார். பலபணிகளைப் புரிந்த புதுமைப்பெண்ணாக நாம் அவரைப் பார்க்கின்றோம். பாசமுடன் அவரது பணியை நினைக்கின்றோம். அவர் தம் வாழ்வு மகத்துவமாய் அமைந்ததற்காய் நன்றியுடன் அவரை நினைவு கூருகின்றோம்.

எல்லாம் வல்ல இறைவனின் ஆசீர் என்றும் அவருடன் தங்கிட உளமார வாழ்த்துகின்றோம்.

திருமதி. பப்சிமரியதாசன்

செயலாளர்

**S.D.C**

HOLY FAMILY CONVENT
DATE 16/6/16
JAFFNA











## பணியிலிருந்து ஓய்வு பெறும் ஆசிரிய நண்பி செல்வி, மேரி பூபதி பெனடிக்ற் அவர்களை வாழ்த்தி வழங்கும் வாழ்த்துப்பா

மருதமும் நெய்தலும் மண்ணின் வளமாய் இலங்கும்
பருவம் தனில் பயன் தரும் பனைவளம் மிகுந்த
அருமையான தமிழ் ஆர்வம் கொண்டயாழ் மண்ணில்
பெருமைசேர் பேறுபெனடிக்ட் தம்பதிகளின் புத்திரியாய் பிறந்தீர்

ஆண்டது ஐம்பத்தாறில் ஆறாம் மாதம் பதினெட்டாம் நாள்
ஆண்டவன் அருளால் அவனியில் உதித்தீர்
பெண் மகவாய் பூப்போல் இப்பதிதனில் மலர்ந்ததாலோ
பண்பானபெற்றோர் பாசமாய் பூபதி எனநாமம் இட்டார்

கண்ணான கல்வியைக் கருத்தோடு கற்றீர் சொந்த மண்ணில்
உயர்கல்வி தொடர்ந்தீர் மன்னாரில் பெண்கள் கல்லூரியில்
உன்னதபணியாம் ஆசிரியர் பணிதனில்
கன்னிவயதாம் இருபத்தொன்றில் களிப்புடன் இணைந்தீர்

மங்கையர்க்கு மாட்சிதரும் மனையியல் துறையில்
சங்கமித்து சமையலில் நிபுணத்துவம் பெற்றீர்
கங்குகரையில்லா தொழிலில் வாண்மைபெற
கலைமாமணி கல்வியில் டிப்ளோமா முதுமாணிப் பட்டங்கள் பெற்றீர்

எண்பத்திரெண்டாம் ஆண்டுதனில் தொண்டாற்ற வந்தீர்
மன்னாரில் புனித சவேரியார் பெண்கள்கல்லூரியில்
மென்மையும் அன்புடன் கண்டிப்பும் சேர
என்றும் இனிமையாய் ஏழு ஆண்டுகள் பணிபுரிந்தீர்

அன்போடுபண்பு, அயராஉழைப்பும், அணிசெய்யும்
அன்றலர்ந்த மலர்போல் இன்றுவரை பணிசெய்து
உன்னதசேவையை உவப்புடன் முப்பொத்தொன்பதுஆண்டுகள்
என்றுமே தோழியாய் நன்றே நலமுடன் வாழவல்ல
தேவனை வேண்டி வாழ்த்துகிறேன்.

செல்வி. சியாமளா கிறிஸ்ரோப்பர்
மன்னார்.

# இணையில்லாச் சேவைக்கு இனிய வாழ்த்துக்கள்

எழில் நெஞ்சம், வதனம் உள்ளக் கமலம் - உயர்
பக்தி நெறியில் கிறீஸ்து விசுவாசம் தழைத்தோங்கிய
யாழ் குருநகர் மண் ஈன்றெடுத்த நல் ஆசான் - எம்
மேரி பூபதி பெனடிக்ற் அம்மை நீவிர் வாழ்க வாழ்கவென
இறை யேசு பாதம் போற்றி வாழ்த்துரைப்போம்.

எம் கல்விச்சாலையில் திருக்குடும்பச் சோலையில்
பல்லாண்டு பணியில் வரலாறுகள் பலவாய் - உம்
கால் தடங்கள் பதித்த கல்லூரி – நின்
சேவையில் மகிழ்ந்து உவகை கொள்கிறது

அதிகம்கருத்து உறுதுணையாய் முகாமைத்துவப் பணியில்
கடினமாய் உழைத்து வெற்றிகள் பலவும் கண்டு
ஆசிரியராய் பகுதித் தலைவராய் பிரதி அதிபராய் - உயர்
சேவையில் அர்ப்பணிப்பு ஆளுமை மிளிர உவந்தீர்.

பேச்சினில் கனிவு தவழ கடமையில் நேர்மையும்
நெஞ்சில் உறுதியும் செயலில் பக்குவமும் கொண்ட
மாண்புறு ஆசான் நீவீர் - எம்
இன்ப துன்பமதில் ஒத்துணர்வு தந்து நட்புமானீர்

நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை என
பள்ளித் தளத்தில் முப்பத்தொன்பது ஆண்டுகளாய் – எம்
பள்ளித் தளத்தில் இருபத்தோர் ஆண்டுகளாய்
சேவையின் சம பாகத்தில் தலைமுறையினருக்கு பணி புரிந்தீர்.

கல்லூரி அன்னையின் பொன்பதித்த வரலாற்றினில்
நின் சேவையும் கலந்ததில் பெருமை கொள்ளுவீர்
பணி நிறைவில் ஓய்வு பெறினும் எம் உறவு தொடர
உடல் உள சுகம் நிறைவாய்ப் பெற
இறையருளை நாடி வாழ்க வாழ்க என வாழ்துகிறோம்.

திருமதி மே. டி யூட்ரவிநாத்<br>
ஆசிரியர்<br>
யா. திருக்குடும்ப கன்னியர் மடம்

# கல்வித் தாய்க்கு நன்றி

கன்னியர் மடம் தன்னில்
கண்ணியமாய் வாழ்ந்தவளே.
கல்லூரிக்காய் உன்
காலத்தை அர்ப்பணித்தாயே!

ஆம் என்றால் அறுநூறும்
இம் என்றால் ஆயிரமுமாய்
கவி தன்னை பாடும்
காள மேகத்தின் மகளோ நீ

உனக்காய் கவி எழுத
ஆயிரம் ஆயிரம் வார்த்தைகள் தேடி
அகராதிகளை புரட்டினேன்.
எத்தனை கோடி வார்த்தை இருந்தும்
உம்மை எழுத வார்த்தை இல்லையம்மா!

பள்ளியின் முத்தாய்
தமிழின் சொத்தாய்
பாரதி கண்ட புரட்சிக்கவிப் பெண்ணாய்
அன்பிற்கு இலக்கணமாய்
ஆசிரியரின் உபதலைவியாய்
பெயரில் ஆசீர்வாதமாய்
திகழ்ந்தீர்

கடவுள் இல்லை என்னும் நாத்திகனும் - உம்
கவிதையைக் கேட்டால் மாறுவானே
ஆண்டவன் தங்கும் இதயமாய்
ஆன்மீகத்தில் திகழ்ந்தாயே

பாலை நிலத்திலே நீரைத்தேடி அலையும்
மானைப்போல – உன் பிரிவால்
பள்ளி நாட்களிலே
மாணவர் நாம் அலையப் போகின்றோமே

ஏழைகளின் மூலதனம் கல்வியென
ஏமாறும் உலகிலே – நாம்
ஏமாறாமல் வாழ
ஏட்டுக் கல்வி தன்னைத் தந்தாயே!

யோண்டார்வின் நிசாந்தினி.
2016 கலைப்பிரிவு

# அன்னையைப் போற்றுகின்றோம்

அன்பான உப அதிபரே!
நீங்கள் இந்த பாடசாலைக்கு ஆற்றிய பணிகள் பல
அதனால் நாமடைந்த பயன்களோ பல
சிறுவர்களைப் போல் பிஞ்சு மொழியில் பேசினீர்!
எம்மோடு சேர்ந்து எம்மை வழிப்படுத்தினீர்!

எம் மனதில் நலன் கருதி அதிபர் ஆசிரியருடன் சேர்ந்து
நற்காரியங்கள் பல செய்தீர்!
எம் பாடசாலை முன்னேறுவதைக் கண்குளிரக் காண கஷ்டங்கள்
பல சுமந்தீர்!

நீர் ஓய்வில் செல்லும் போது மன நிறைவுடன் செல்கிறீர்!
அதனால் நீர் பாடசாலைக்கு ஆற்றிய பணிக்கு கிடைத்த
பயன் மாணவர் பெறுபேற்றின் உயர்ச்சி
இதை நீர் O/L, A/L மாணவர்களின் பரீட்சை பெறுபேற்றில் கண்டீர்!

மன நிறைவுடன் செல்கிறீர்!
இன்னும் இப் பாடசாலைக்காக இறைவனைப் பீரார்த்தீப்பீர்.
நாம் உமக்காகப் பிரார்த்திப்போம்.
என்றும் இன்பமாக வாழ வாழ்த்தி விடைபெறுகின்றோம்.
அனாலும் உம் நினைவுகள் எம் மனதில் என்றும் நிலைத்திருக்கும்.

"நன்றி"

7C மாணவர்கள்

## வாழ்த்துகின்றோம் உம்மை வாயார...

திருக்குடும்ப பள்ளிதனில்
தினம் தினம் பணிபுரிந்து
கடமையும் கண்ணியமும்
கருத்தாய் மனதில் ஏற்று
ஆசிரியராய் பிரதி அதிபராய்
இப்பாடசாலையின் ஆணிவேராய்
இருந்த அன்னையே
வாழ்த்துகின்றோம் உம்மை வாயார

மிடுக்கான தோற்றம் நேரிய பார்வை
வளையாத நடை கசங்காத உடை
அதிராத சிரிப்பும் ஆரவாரமற்றபேச்சும்
இனிதாக பழகும் பண்பான கதையும்
பழுதற்ற ஆன்மீகம் பயந்தறியா சுபாவம்
நிகரற்ற தலமை நீதி வழுவாத செயல்கள்
இவையாவும் ஒழுங்கே பெற்றவரே
வாழ்த்துகின்றோம் உம்மை வாயார

உயர்கல்வி பல கற்றும் உயர்ந்த நெறி நின்றும்
நெறி பிறழாமல் திருக்குடும்பத்தை
நெடுந்தூரம் நடாத்திச் சென்றும்
பாரம்பரியம் பேணி பள்ளி உயர
பாடுபட்டு உழைத்தும்
அதிபர்களுக்கு தான் கொடுத்தும்
அயராது பணிபுரிந்தவரே
வாழ்த்துகின்றோம் உம்மை வாயார

ஓய்வால் நின் உடலும் உள்ளமும்
சுகம் பெற்று வாழ
ஒரே இறைவனின் அருளாசி கிடைக்க
வாழ்த்துகின்றோம் உம்மை வாயார
உம் உன்னத பணிக்கு
சான்றாக நாம் உரைப்போம்
திருக்குடும்பத்தின் புகழ் காண
அதற்கு நீர் எம்மை வாழ்த்துமே வாயார

திருமதி. ஜெபனேசன்
ஆசிரியர், யாழ் திருக்குடும்பக் கன்னியர் மடம்








ANNUAL LUNCH



# வழிகாட்டியாய் திகழ்ந்தவரே

அன்புள்ள செல்விபெனடிற் ஆசிரியை அவர்களே, ஏறத்தாள நீர் எம் பாடசாலையில் 21 வருடங்கள் உமது பணியை ஆற்றி இப்போது ஒய்வு பெற்றுச்செல்லும் எமது ஆசிரியை அவர்களே, உமது ஆசிரியப்பணியை ஆற்றிய பின் இப்பாடசாலைக்கு உபஅதிபராக தெரிவு செயப்பட்டிரே.. உம் ஆசிரியப்பணியில் நீர் மாணவர்களுக்குக் கற்றுக்கொடுத்த நற்பழக்கவழக்கங்களை இன்றும் உமது மாணவர்கள் கடைப்பிடிக்கிறார்கள்.

நான், உம்மை முதன்முதலில் கண்டபோது சுனாமியைக் கண்டதுபோல் பயந்தேன். காலப்போக்கில் அன்னை தெரேசாவைப்போல் பழகியதைப்பாரத்து நான் வியந்தேன்.அரைகுறை அறிவுடன் வந்த எம் சிறுவர்களை அறிவுப்பொக்கிசமாக ஆக்கியவர் இப்பெரும் ஆசானே.எமது குறைகண்டு, எமது குடும்பநிலைகண்டு ,எமக்கேற்ற படிமுறையில் அறிவைப்புகுத்தினீர். நாம் பிழைவிட்ட போது, வீட்டுவேலை செய்யாதபோது அன்பால் அடித்தும், அரவணைத்தும் அறிவூட்டிய தெய்வம் எமது அருமை அம்மா நீரே. கல்விப்பணியில் கற்பித்தல் மட்டுமன்றி துறைசார் விடயங்களையும் ஒழுக்கவியல் அறிவுரைகளையும் ஒருங்கேதந்தவர். எனக்கு மட்டுமன்றி எனது அன்னைக்குமாக இரண்டு தசாப்தமாக மாணவச்செல்வங்களை வழி நடத்தும் ஆசிரியப் பெருந்தகையாகித் தற்போதும் இளந்தென்றலாக எம் கல்வியில் ஆரோக்கியம் பேணும் ஆசிரியத் தெய்வமாக நின்று, வைத்தியர், கணக்காளர், பொறியியலாளர், தாதியர், ஆசிரியப் பெருந்தகைகள் மற்றும் துறவிகளையும் உருவாக்கிய பெருமை இவரையே சாருவதோடு எமது நாட்டில் மட்டுமன்றி மேலைத்தேய நாட்டிலும் எமது மாணவர்கள் தேர்ச்சி பெற்று புகழ் அடைவதற்கு அடிப்படைக் கல்வியினை வழங்கிச் சிறந்த பெறுபேற்றினைப் பெற உதவிய நம் ஆசிரியரை எந்த வார்த்தையினால் புகழ்வதென்று தெரியாமல் திண்டாடும் மாணவச்செல்வங்களாகிய நாம் இவரை எமக்கு அறிவு தந்தவராகக் கருதாது எமது எதிர்கால முன்னேற்றத்திற்கு முன் உதாரண தேவதையாகக்கருதி இவரை நான் சிரந்தாழ்த்தி கைகூப்பி வணங்கி விடை பெறுகிறேன் நீங்கள் இப்பாடசாலையை விட்டு ஓய்வு பெற்றுச் சென்றாலும் உம் ஞாபகங்கள் ஒவ்வொரு மாணவர்கள் மனதிலும் நீங்காத இடம் பிடிக்கும்.

நன்றி

ஜொய்லின் தர்மிகா ஜெயராஜ் 6c

மாணவி

யாழ் திருக்குடும்பக் கன்னியர் மடம்

# நன்றி என்ற ஒரு சொல்

நாம் பல இடங்களில் நன்றி என்ற ஒரு வார்த்தையைச் சொல்லி பல நன்மைகளைப் பெற்றுச் செல்கிறோம். உண்மையில் நன்றி என்ற ஒற்றைச் சொல்லையும் அந்த சொல்லிற்குரிய வரிகளையும் அவர்கள் செய்த நன்மைகளையும் நாம் நன்றி உள்ளவர்களாக இருந்து நினைத்துப் பார்த்தால் அது எவ்வளவு பெரிய மகத்துவம் வாய்ந்த சொல் என்பது எமக்குப் புரியும். அவர்கள் எம்மிடம் எந்தவித பிரதிபலனையும் பாராமல் செய்த நன்மைகளை நினைத்து நாம் என்றென்றும் அவர்களுக்கு நன்றியுடையவர்களாக இருக்க வேண்டும்.

ஆம், அப்படி நான் நன்றியுடையவளாக இருக்க வேண்டியவர்களில் ஒருவர் தான் என் பெனடிக்ற் ஆசிரியர். வலது கை செய்வதனை இடது கை அறியாத வகையில் எனக்குப் பல உதவிகள் செய்ததை நான் என்றும் மறந்துவிடக்கூடாது. உதவிகள் மட்டும் அல்ல நான் பல வேளைகளில் என்ன செய்வதென தெரியாமல் கலவரப்பட்டு நின்ற போது பல ஆலோசனைகள் சொல்லி வழிநடத்தியிருக்கின்றார். ஆலோசனை பெறுவதற்காக அவர் தனிமையில் இருக்கும் சந்தர்ப்பங்களைப் பயன்படுத்தி பல நன்மைகள் பெற்றிருக்கின்றேன். நான் கவலையாக இருந்தால் அதன் காரணம் கேட்டறிந்து அதற்கு என்ன செய்யலாம் என்று ஆலோசனை சொல்வார். நான் உரிமையோடு உதவி என்று கேட்டவர்களில் பெனடிக்ற் ஆசிரியரும் ஒருவராவார். அவர்களிடம் பழகும் போது, உப அதிபராகப் பழகுவதில்லை. உடன் பிறப்பாகவும் ஒரு உற்ற நண்பியாகவும் பழகுவதைப் போலவே பழகுவார்.

அலுவலகத்தில் வேலை செய்யும் போது அவரது ஆளுமையை எண்ணி வியந்த சந்தர்ப்பங்கள் பல. சிரித்துக் கதை சொல்லியே முழு வேலையும் வாங்கி விடுவார். சில நேரங்களில் ஏதும் பொருள் கேட்டாலோ நாங்கள் வேலை செய்யவில்லை என்றாலோ கோபமாக உரக்கப் பேசிவிட்டு சென்று விடுவார். ஆனால் மீண்டும் வரும் போது நாம் அவர் கோபமாக இருப்பாரென நினைத்தால் எல்லாவற்றையும் மறந்து சகஜமாக பேசியபடி வருவார். பாடசாலைப் பொருட்களில் மிகவும் கவனமாக இருப்பார். எல்லாப் பொருட்களும் இருக்கவேண்டிய இடத்தில் இருக்கவேண்டும் என்று சொல்வார். எந்த வேலையிலும் செம்மை, நேர்த்தி, போன்ற பண்புகளை எதிர்பார்ப்பார். அலுவலக வேலைகளின் போது நான் திணறி நிற்கும் சந்தர்ப்பத்தில் எனக்கு ஞாபகப்படுத்தி உடனே அதை சரியாக செய்ய உதவுவார். அப்படிப்பட்ட ஒரு ஆசான் எமது பாடசாலையிலிருந்து இளைப்பாறினாலும் அவர் எங்கிருந்தாலும் உடல், உள, ஆரோக்கியத்துடன் சந்தோசமாக வாழ எல்லாம் வல்ல ஆண்டவனை வேண்டி நிற்கின்றேன்.

நன்றி

என்றும் உங்கள்

திருமதி. பூமாதேவி மகேஸ்வரன்

யாழ் திருக்குடும்பக் கன்னியர் மடம்

## பாசமான அன்னையே

கவிதைக்கே கவிதை எழுத- கரம் கூட
தயங்குகின்றது. மொழியும் கிண்டலாக
எனைப் பார்த்து சிரிக்கின்றது, ஆனாலும்
உம் பிரிவின் வலியைக் கூட கவிதை தான்
பொழிய விரும்புகிறது

கன்னியர்மடம் தனில்
கண்ணினை இமை காக்கும்
கண்ணிமையாய்
கன்னியர்மட மாணவர்தனில்
குஞ்சைக் காக்கும்
கோழியாய் திகழ்ந்த எம் ஆசானே

கவிதைக்குக் கவிதையாய்
தமிழுக்குத் தமிழாய்
சேவைக்குச் சேவையாய்
பணி புரிந்தீர்

கல்வி எனும் அறிவுக் கடலிலே
கலைகள் பலவற்றைக் கற்று
மாணவர் முன் கவிமழையாய்
பொழியும் நல் ஆசானே

கலைகள் எனும் கடலிலே
கவனமதை கச்சிதமாய் இருத்தி
கனிவுடனே கல்வி தந்த ஆசானே
காலங்கள் கடந்து சென்றாலும்
காவியமாக நிலைத்து நிற்கும்
உம் கடமைகளுக்கு ஓய்வில்லை

கல்வியில் கண்மணியாக
கற்பினில் கண்ணகியாய்
கவிதையில் கண்ணதாசனாய்
கடமையில் கண்ணியமாய்
கன்னியர் மடத்தின் உப அதிபராய்
ஆசீர்வாதமாய் விளங்கும் எம் தாயே

சொற்களிலே தெய்வம் உறைகின்ற அன்னையவள்
ஒழுக்கமும் கண்டிப்பும் கற்றுத்தரும் அன்னையவள்
இவ்வளவு நாளும் பிள்ளைகளை
அன்புடனும் பாசத்துடனும் வளர்த்த அன்னையவள்
நீங்கள் எம் பாடசாலையை விட்டு
நீங்கினாலும் நீங்காமல் மனங்களிலே
நிலைத்து நிற்கும் அன்னையவள்

உயர்தரம் கலைப்பிரிவு
**(2016 Arts 1)**

## வழிகாட்டி நீயானாய்.........

தன்னிகரில்லாத் தமிழொன்று
தரணியை விட்டு
தன் பயணத்தை மாற்றுகின்றது.
தன் இறை சேவையைத் தொடர....

பள்ளிப் பருவமதில் - எனக்கு
தமிழை தலை தூக்க வைத்தாய்.
தலை வணங்குகிறேன் தாயே
நீ பெற்றுத்தந்த தமிழுக்காய்...

வகுப்பறைக்கு வரும் வாசலிலே
கவிதையை காதோரமாய்
காற்றிலே தவழ விடுவாய்
இப்போதும் இனிக்கிறது...

கண் மூடி கண்திறக்கும் கால ஓட்டமதில்
ஆறாண்டு கழித்து வந்தேன்
மீண்டும் உன் பாதம்
ஓர் ஆசிரியையாய்...

ஐந்து வருட பயணமதில்
ஆசிரியப் பணி சிறக்க
அறிவுரைகள் பல தந்தாய்
நல் ஆறுதலும் தந்தாய்...

முடியவில்லை எனக்கு
முற்றுப் பெறும் உன்சேவை
நீடிக்காதோ என்றும்
வேண்டுகிறேன் நாளும்...

திருமதி றொபிமாபெல் சுதாகர்.
ஆசிரியர்,

யாழ் திருக்குடும்பக் கன்னியர் மடம்











# பிரியாவிடை பெறும் நாள்

நகருகின்ற நாட்களிலே
பிரிய மறுக்கின்ற
பிடிவாதங்களுடன்
எம் பாடசாலையை
விட்டு பிரியாவிடை
பெறுவது ஏனோ???

எம் வகுப்பறைக்குள்
நுழைந்து ஒரு
கவிதை சொல்லும்
வதனம் தான் இனிமேல்
நம் மத்தியில்
வந்துவிடாதோ???
காலத்தின் கோலத்தால்
எம் பாடசாலையை விட்டு
நீர் நீங்கிச்சென்றாலும்
உம்முடைய அழகிய
வதனம் எம்மை விட்டு
முப்பொழுதும் நீங்குவதில்லை...

நாட்களும் நகர்ந்தன
கடிகார முட்களும் சுற்றிக்
கொண்டு தான் இருக்கின்றன.
நீர் எம்மை விட்டுப் பிரியும் காலம்
வெகுதூரத்தில் இல்லை – எம் விழியோரத்தில்

பிரியாவிடை பெற்ற பின்பும்
மறைவதில்லை சிலரது நினைவுகள்
அது போலவே எம் மத்தியில்
ஆயிரம் உப அதிபர்கள்
வந்தாலும் எம்மை விட்டு என்றும்
மறையப் போவதில்லை உம் அழகிய வதனம்

**P.**நிரேக்கா (மாணவி)
உயர்தரம் கலைப்பிரிவு **(2016)**

# எம் உப அதிபர்

என் நெஞ்சில் தோன்றிய இனம் புரியாத ஆனந்தத்தோடு என்னுடைய ஆசானாகிய செல்வி பூபதி பெனடிக்ற் அவர்களை பற்றி நான் கண்ட பார்வையில் எப்படிப்பட்டவர் என்பதை எழுதுகின்றேன். நான் ஆரம்ப வகுப்பிலிருந்து இப்பாடசாலையில் படித்தாலும் அவரைப் பற்றி அறிந்தது தரம் 6 இல் இருந்துதான். என்னே! ஒரு நடை, வீரம் தங்கிய நடை எனலாம். அவரைக் கண்டதும் முதலில் தோன்றிய உணர்வு பயம்தான். அவர் எமது வகுப்பறையின் ஊடாக வருகின்றார் என்பதை தூரத்தில் கண்டாலே போதும். அமைதிக்கு இலக்கணமாகி விடுவோம். அவர் ஒரு நல்ல தமிழ் ஆசானாக இருந்தார். அவர் சில சந்தர்ப்பங்களில் கவிதைகள் கூறி அறிவுரைகள் வழங்குவார்.அப்போது கவிதையினை விளங்கும் அளவுக்கு நான் இல்லை எனினும் அவர் சொல்லுகின்ற ஒவ்வொரு வார்த்தையும் அழுத்தமாக சொல்லி விடுவார். அதனாலே நான் அவரின் கவிதைகளை இரசிக்கத் தொடங்கினேன். பின்னரே கவிதைக்குரிய அர்த்தங்களையும் புரிந்து கொண்டேன்.

அம்மாவின் பின் ஆசான் என்பதைவிட தாய்க்கு நிகரானவர்தான் ஆசிரியர் என்றுதான் கூற வேண்டும். அன்று என்னால் மறக்க முடியாத நாள். வீரம் கொண்டவராகவும் அனைத்து வேலைகளை யும் அள்ளிக்கட்டிக்கொண்டு சுறுசுறுப்புடன் வேலை செய்யும் ஒரு பட்டாம் பூச்சியாகவும் வந்தவர், ஏனோ தெரியவில்லை. ஆண்டவர் அவரையும் சோதித்துப் பார்த்துள்ளார் எனலாம். அன்று ஆசிரியர் தினம். எல்லா ஆசிரியர்களும் மேடையில் ஏறிய வேளை என்னுடைய ஆசானாகிய பெனடிக்ற் அவர்களையும் மேடைக்கு அழைத்தார்கள். ஆனால் எனது ஆசிரியர் மேடைக்கு வரவில்லை. என்னை அறியாமல் என்னுடைய கண்களில் இருந்து நீர் வழிந்து ஓடியது. எனக்கே புரியவில்லை ஏன் அழுதேன் என்று. ஏனெனில் அவருடைய கால் உடைந்து நடக்கவே முடியாத நிலையில் ஒரு கதிரை யில் பொம்மை போல இருந்தார். அப்போது மாணவத்தலைவி ஒருவர் அவர் இருக்கும் இடத்தில் வந்து மாலைஅணிவித்து பரிசில் கொடுத்தார். அந் நிகழ்வை என்னால் மறக்க முடியவில்லை. பின்னர் அவர் தன்னுடைய காலைக் குணமாக்கி மீண்டும் புத்துணர்ச்சி யோடு பணியாற்றினார். அவர் எந்தவொரு விடயத்தையும் ஆராயாமல் தண்டனை வழங்கமாட்டார். குற்றம் தான் என நிச்சயமாகி னால் அந்தக் குற்றத்தை திரும்பச் செய்ய நினைக்காத அளவிற்கு எம்மைத் திருத்தி ஆறுதல்ப்படுத் துவார். உதாரணமாக மாணவர்கள் பாடசாலைக்கு பிந்தி வந்தால் அன்போடும் கரிசனையோடும் விசாரித்த பின்னரே செயற்படுவார். மிகவும் இரக்கத் தன்மை கொண்டவர். மிக்க பொறுமை உடையவர். தனக்கென ஒரு மாணவர் என வைத்து அவர்களை மட்டும் அன்பு செய்யாமல் எல்லா மாணவர்களும் ஒன்றே என இருந்தார். எல்லோர் மீதும் சமமான அன்பை வைத்திருந்தார்.

நான் தரம் 9 படித்த வேளையில் பாடசாலையை விட்டு விலகிய மாணவர்கள் அதாவது உயர்தர பரீட்சை எடுத்த மாணவர்கள் பாடசாலை தினத்திற்கு வந்திருந்தார்கள். அப்போது எங்களுடைய வகுப்பு மாணவர்கள் சத்தம் போட்ட வேளையில் அவர்கள் எங்களைத் திட்டி விட்டார்கள். அப்போது நாங்கள் கூறினோம் நீங்கள் பாடசாலையை விட்டு விலகி விட்டீர்கள் எங்களுக்கு புத்தி சொல்ல வேண்டாம் என்று. அன்று சொன்னது தவறு என்பதை இன்று உணர்கிறேன். அந்த உயர்தர பரீட்சை எடுத்த மாணவர்கள் பெனடிக்ற் ஆசிரியரிடம் இதைப்பற்றி கூறி இருந்தார்கள். இதை அறிந்த நான் அடுத்த நாள் பயத்தில் பாடசாலைக்கு செல்லவில்லை. பின்பு ஆசிரியர் மறந்து இருப்பார் என நானும் பாடசாலைக்கு சென்றேன். மூன்றாம் பாடவேளை நேரமிருக்கும், வகுப்புத்தலைவி ஆகிய என்னை பெனடிக்ற் ஆசிரியர் கூப்பிடுகின்றார் என்று ஒரு மாணவத்தலைவி அழைத்துச் சென்றார். என்னுள் எழுந்த பயமிருக்கின்றதே அதை சொல்ல வார்த்தையில்லை. நான் போனதும் அடிப்பார் என நினைத்தேன். ஆனால் நினைத்தது ஒன்று நடந்தது ஒன்று அவர் என்னை அடிக்கவில்லை. நாளைக்கு நீரும் இவ்வாறு பாடசாலை வரும்போது மற்றைய மாணவர்கள் சொன்னால் உமக்கு வேதனையாக இருக்காதா? என்று அறிவுரை சொன்னார்.

இவ்வாறு மாணவர்களோடு மாணவராய் சேர்ந்து அறிவுரை வழங்கும் ஆசான் ஒருநாளும் மாணவர்களை விட்டுக் கொடுத்து பேசமாட்டார். மாணவர்கள் மேல் அவ்வளவு நம்பிக்கையும் பாசமும் கொண்டவர். உதாரணமாக பாடசாலையின் இல்லமெய்வலுனர் விளையாட்டுப்போட்டிகளில் இறுதியாக

மாணவத் தலைவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் கயிறு இழுக்கும் போட்டி நடைபெறும். அப்போது 10 ஆசிரியர்கள் கயிறு இழுக்கப் போனால் மீதி எல்லா ஆசிரியர்களும் ஆசிரியர்களுக்குத்தான் ஆதரவு கொடுப்பார்கள். ஆனால் மாணவத்தலைவர்களுக்குப் பக்கத்தில் நின்று அவர்கள்தான் வெற்றிபெற வேண்டும் என உற்சாகப்படுத்தும் ஒரே ஆசான் பெனடிக்ற் ஆசிரியர் மட்டும்தான்.

அவர் மாணவத்தலைவிகளின் பொறுப்பாசிரியர் ஆகவும் மாணவத்தலைவர்களை தேர்ந்து கொள்ளும் ஆசானாகவும் விளங்கினார். அவர் சரியான மாணவர்களைத் தேர்ந்தெடுத்து அவர்களுக்கு ஓர் நல்ல ஆசானாக வழிகாட்டியாகச் செயற்பட்டு வந்தார். பல பிரச்சினைகளுக்கும் சவால்களுக்கும் முகம் கொடுத்து சரியான பாதையில் தானும் நடந்து மாணவர்களையும் வழிநடத்தினார்.

பின்பு அவர் 2010ம் ஆண்டு எமது பாடசாலையின் உபஅதிபராகப் பதவியினை ஏற்றுக் கொண்டார். தனக்குரிய கடமைகளை சரியாக செய்து வந்தார். அவர் தான் ஒரு உபஅதிபர் என்ற அதிகாரம் தற்பெருமை இல்லாது இருந்தார். உதாரணமாக நிலத்தில் குப்பைகளைக் கண்டால் தானே குனிந்து எடுத்து குப்பைக் கூடையில் போடுவார். இவ்வாறு தாழ்ச்சியுடையவராக திகழ்ந்தார்.

அவர் ஒரு உபஅதிபராக இருந்தாலும் எமக்கு தமிழ் ஆசிரியராக தமிழ் படிப்பித்தார். அவர் ஒரு தவணை படிப்பித்தாலும் அவர் சொல்லித்தரும் கதைகளுக்கு நாங்கள் அடிமை என்போம். படிப்பித்தலை சாதாரணமாக இல்லாமல் நல்ல கதைகளைச் சொல்லி மிகவும் சுவையாக பாடங்களை சொல்லித்தருவார்.

நாம் விளங்கவில்லை என்று எத்தனை தடவை கேட்டாலும் சிறிதும் சலிப்புத் தன்மை இல்லாமல் சொல்லித்தருவார். அவரைக் கண்டதும் எனக்கு முதலில் அச்ச உணர்வு தான் ஏற்ப்பட்டது. எனினும் அவரது உண்மை நிலையை உயர்தர வகுப்பிலே அறிந்து கொண்டேன். ஆவர் தனது பணிநேரத்தில் பணிகளை சரியாக செய்ய வேண்டும் என்றும், ''தொட்டில் பழக்கம் சுடுகாடு'' என்ற பழமொழிக்கு அமையவும் எம்மை சிறுவயதிலிருந்தே ஒழுக்கமாக வளர்க்க வேண்டும் என்பதற்காகவே அவர் எம்மை கண்டித்து வழிநடத்தினார். எமக்கு என்ன பிரச்சினை வந்தாலும் ஆறுதல்படுத்தி இவ்வாறுதான் வாழ வேண்டும் என நேர்மையான வழியைக் காட்டி அறிவுரை கூறுவார். ஆனால் அவர் மிகவும் ஜொலியான தன்மை கொண்டவர். வாழ்க்கையில் வரும் துன்பங்களை இன்பங்களாக நினைத்து வாழும் ஆற்றல் கொண்டவர். அவர் மிகவும் சந்தோசமாக தன்னுடைய வாழ்க்கையை வாழ்பவர்.

மாணவர்களை கண்டிக்கும் அதே வேளையில், காலம், நேரம், இடம் அறிந்து சுதந்திரமாக வாழவும் அனுமதிப்பார். உயர்தர மாணவர்கள் ஆகிய எங்களை சுற்றுலாவுக்கு அழைத்துச் சென்ற போது இதனை நான் அறிந்து கொண்டேன். சுற்றுலாவுக்கு ஆசிரியர்கள் ஒரு சிலரும் எம்முடன் வந்திருந்தார்கள். அப்போது தூர இடங்களுக்க பஸ்ஸில் பயணிக்கும் போது பஸ்ஸில் மாணவர்கள் தாம் அடல் பாடல்களை மேற்கொள்ளும் போது அவரும் எங்களோடு சேர்ந்து கைதட்டி எங்களை உற்சாகப்படுத்தி வந்தார். சுற்றுலாவிற்கு நாங்கள் தூர இடங்களுக்குச் சென்றோம். அப்போது எங்கள் எல்லோரையும் கவனமாகவும் குழந்தையை கவனிப்பது போல கவனித்தார். ஆனாலும் தவறுகள் செய்து அடியும் வாங்கினோம். நாங்கள் அதிபரிடம் எதையும் கேட்கப்பயந்தால் எங்களுக்காக போய் அதிபரிடம் கதைப்பவர்தான் என்னுடைய அன்பு ஆசான்.

இவரைப்பற்றி சொல்வதற்கு ஒரு ஜென்மம் வேண்டும் என்பேன். ஆனாலும் இறுதியாக கூற வருவது தான் முக்கியமான விடயம் என்பேன். அதாவது கற்றலை விட முக்கியமானது அவருக்கு ஒழுக்கம் தான். ஒழுக்கமுள்ள பிள்ளைதான் கல்வியையும் ஒழுக்கமாக கற்றுக்கொள்ளும் என்று கூறுவார். பெண்கள் இந்த சமுதாயத்தில் தலைநிமிர்ந்து வாழ ஒழுக்கம் ஒன்றே மிக முக்கியமானது என சொல்லுவார். பருவ வயதில் வருத்தங்களுக்கு அவரே நேரடியாக மருந்து தருவார். அதாவது மாணவர்கள் வாலிப வயதில் தம்மையறியாமல் தம் திசையை விட்டு வேறு வாழ்க்கையை தேடிச் செல்ல நினைக்கிற வேளையில் சற்றேனும் தயக்கமில்லாமல் இந்த வாழ்க்கை எதிர்காலத்தில் எப்படி இருக்கும் என்பதை ஆணித்தரமான ஆதாரங்களோடு விளக்கம் தருவார். பெண்கள் வாழ்க்கையில்

தெரிந்து கொள்ள வேண்டிய அனைத்து விடயங்களையும் நேரடியாக சுற்றி வளைக்காமல் கூறிவிடுவார். வாழ்க்கைக்குரிய படிப்பினைகளையும் தத்துவங்களையும் துல்லியமாகச் சொல்லித் தருவார்.

நான் இன்று இப்பாடசாலையை விட்டு வெளியேறினாலும் அவரைக் கண்டால் பயமும் மரியாதையும் என்னை அறியாமலே வந்து விடும். இப்போதும் அவரைக் கண்டால் மரியாதை செலுத்துவேன். அவரருக்கு அருகில் நின்று கதைக்குமளவு இன்றுவரை துணிச்சல் வரவில்லை. அதற்கான தகுதியும் என்னிடம் இல்லை. அவரின் பக்தியை பற்றிச்சொல்லியே ஆகவேண்டும். ஆவர் தற்போது அடைக்கல அன்னை ஆலயத்திற்கு ஒவ்வொரு ஞாயிறும் தவறாமல் வருவார். நான் பூசைக்கு பிந்தி வருவதால் அவர் பக்கம் போகாமல் கரைப்பகுதியில் நின்று விடுவேன். அவர் திருப்பலிக்கு நேரம் தவறாமல் வருவார். நான் சரியான நேரத்திற்கு சென்றாலும் அவரின் அருகிலோ அவருக்கு முன்பாகவோ இருக்கமாட்டேன். ஏனெனில் அவரை நான் அந்தளவிற்கு மதிக்கின்றேன்.

எமது ஆசானைப் பற்றி எழுதினால் எழுதிக்கொண்டே போகலாம். ஆனாலும் கொடுக்கப்பட்ட வரையறைக்கு ஏற்ப நான் எழுதவேண்டும் என்பதால் இத்தோடு நிறைவு செய்கின்றேன். எமது ஆசான் என்றும் புன்னகையுடனும் சந்தோசத்துடனும் நூறு வருடம் வாழ வேண்டும் என்று வாழ்த்துகின்றேன்.

நன்றி.

செல்வி. சர்மி ஜக்குலின் பீற்றர்தேவதாசன்.

பழைய மாணவி

## உப அதிபர் செல்வி.பெனடிக்ற்

எமது பாடசாலை உபஅதிபரின் பெயர் பூபதி பெனடிக்ற் ஆகும். இவர் கடந்த பல வருடமாக எமது பாடசாாலையில் பணியாற்றி வருகின்றார். இவர் பாடசாலைக்கு ஆற்றிய சேவைகள் அளப்பரியன. தன் பொன்னான நேரங்கள் அனைத்தையும் பாடசாலையின் எழுச்சிக்காக செலவிட்டவராக திகழ்கின்றார். இவர் மாணவர்கள் மீது மிகவும் கரிசனையுடையவர். எல்லாம் வல்ல இறைவனை நித்தமும் தொழுபவர். தாய்மொழியாம் தமிழ் மீது மிகவும் அளவு கடந்த பற்றுள்ளவர். கவிதைகள் எழுதுவதில் எம் பாடசாலையில் இவரைத் தவிர சிறந்தவர் எவரும் இல்லை. தினமும் காலைக்கூட்டத்தில் இவர் சொல்லும் கவிதைகளைக் கேட்டால் மனம் இன்புறும்.

எம் பாடசாலை உபஅதிபரான இவர் சகல ஆசிரியர்களோடும் மாணவர்களோடும் அன்பாகவும் மரியாதையுடனும் பழகுவார். தடி கொண்டு எவரையும் தண்டிக்காமல் தன் அன்பு மொழியால் மாணவர்களாகிய நாம் விடும் சின்னச் சின்னப் பிழைகளையும் சுட்டிக்காட்டித் திருத்துவார். அதிபர் கூறும் விடயங்களை முழு மனத்தோடு செய்து முடிப்பவர். பாடசாலைக் கடமைகளைப் பக்குவமாய் செய்து முடிக்கும் விசேட திறமைகளைக் கொண்டிருப்பவராகக் காணப்படுகின்றார்.

இவரது வாயால் வரும் ஒவ்வொரு வார்த்தைகளும் மாணவர்களாகிய எங்களுக்கு பொன்மொழிகளாகக் காணப்படுகின்றன. இவர் எம் பாடசாலையையும் மற்றும் எம்மையும் விட்டுப் பிரிந்தாலும் இவர் கூறிய பொன்மொழிகள் எம் காதுகளிலும் பாடசாலைச்சூழலிலும் ஒலித்துக் கொண்டே இருக்கும். எம் பாடசாலைக்கு ஆற்றிய சேவைகளை கூறிவிட காலங்கள் போதாது. எம் பாடசாலையை விட்டுப்பிரிந்து சென்றாலும் அவர் என்றும் எம்மோடு தான் இருப்பார். பாடசாலைக்கு ஆற்றிய சேவைக்காக நன்றி தெரிவித்து அவரது சேவை தொடரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

பி.துஷாறா (**6A**)

# எனது பார்வையில் உப அதிபர்

## மாணவியின் நினைவுகளில் இருந்து

ஒவ்வொருமனிதனின் வாழ்விலும் பள்ளிக்காலம் என்பது மறக்கமுடியாத பலநினைவுகளின் வண்ணச் சிதறல்களால் கோர்க்கப்பட்டதோர் அழகியமுத்தாரம். இந்தமுத்தாரத்தின் ஒவ்வொரு முத்துக்களிலும் வரலாறாய் மாற்றப்படவேண்டிய பல மதிப்பிற்குரிய ஆசான்களின் சுவடுகள் ஆழப் பதிந்துள்ளன.

எனவே பாடசாலை மாணவி எனும் இனிய பெருமையைத் தொலைத்துவிட ஒருவருடகாலமே எஞ்சியிருக்கும் என்னுடைய முத்தாரமும் கூட அத்தகைய பல ஆசான்களின் புன்னகைபூத்த வதனங்களை தன்னுடன் தாங்கிநிற்கிறது. நன்றியோடு நான் நினைக்கும் அந்த ஆசிரிய அன்னைமாரில் ஒருவரே பள்ளியின் உபஅதிபராய் எம்மை இது வரைகாலமும் வழிநடத்திவந்த எம் அன்பிற்கும் மதிப்பிற்கும் உரிய ஆசிரியை செல்வி பூபதி பெனடிக்ற் அவர்கள்.

ஒருமனிதன் தன் வாழ்நாளில் பெரும் பகுதியை மகிழ்வுடன் கழிக்கும் இடம் பாடசாலை. ஒவ்வொரு மனிதனிற்கும் மாண்பையும் மனிதத்தையும் பண்பாடுகளையும் நல்லகல்வியையும் அள்ளிவழங்கும் ஓர் அமுதசுரங்கம் பாடசாலை என்றால் அதுமிகையல்ல. இத்தகையதோர் அற்புதசுரங்கத்தை வழிநடத்தும் பாரியபணியை செவ்வனேநிறைவேற்றி இளைப்பாறும் அன்பிற்குரிய உபஅதிபர் பெனடிக்ற் அவர்களின் விழாமலரில் என் ஆக்கமும் ஒன்றாக இணைவதையிட்டு பேரானந்தம் கொள்கிறேன்.

ஒருஆசிரியையாகவும் பின் உப அதிபராகவும் இப்பாடசாலை வளாகத்தினுள் நடமாடிய Benedict Miss அவர்கள் எப்போது எனது வாழ்வில் தாக்கங்களை ஏற்படுத்தத் தொடங்கினார் என்பதை நான் சரியாக அறியாதபோதும் தரம் 06 முதல் நான் கண்டுவளர்ந்த அவர்களின் நடத்தைகள் என்னில் குறிப்பிடத்தக்க அளவு மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளன என்பதை நான் உணரத் தவறவில்லை.

ஓர் மாணவி என்ற வகையில் நல்லாசான் எப்படி இருக்கவேண்டும் என்ற என் கற்பனை ஓட்டங்களுக்கு உயிரூட்டிய ஒருவராய் உபஅதிபரை நான் கண்டேன். வெறுமனே வார்த்தைகளாலும் கட்டளைகளாலும் காரியங்களைச் செய்விப்பவரல்ல எம் உபஅதிபர். அவருடைய செய்கையொன்றால் அனைத்தையும் சாதிக்கவல்லவர். ஆசிரியர்களிற்கே உரியகண்டிப்பு அவரிடம் காணப்பட்டாலும் ஓர் அன்னைக்குரிய அன்பும் அவரிடம் உறைந்திருந்தது.

உபஅதிபரின் பல்லாயிரக்கணக்கான பணிகளில் என்னை மாற்றிய மிகமுக்கியமான இரு விடயங்கள் அவரின் அர்ப்பணிப்பும் நேரந்தவறாமையும் என்றால் அதுமிகையல்ல. எந்தவொரு அசாதாரணமான அல்லது வழமைக்குமாறான நாளிலும் கூட காலை 7.15 மணிக்கு முன்னதாக உபஅதிபரை பாடசாலைவளாகத்தினுள் காணலாம். இதனைத் தினமும் அவதானித்ததாலோ என்னவோ, எனக்கே தெரியாமல் அவரிடம் போட்டியிட்டு எப்படியாவது அவரிற்குமுன் பாடசாலைக்கு வந்துவிட வேண்டும் என்றஎண்ணமும் என்னுள் தொற்றிக்கொண்டது. மேலும் உபஅதிபரின் அர்ப்பணிப்பானது என்னை எப்போதும் மெய் சிலிர்க்க வைக்குமொன்று. அவரின் இத்தகைய அர்ப்பணிப்பிற்கு மிகச்சிறந்த

உதாரணங்களாக எமது பாடசாலையில் நடைபெறும் ஒவ்வொரு நிகழ்வையும் கூறலாம். முதல் நாள் ஆயத்தவேலைகளில் இருந்து அடுத்தநாள் ஒழுங்கமைத்தல் வரையில் தன்னை முழுமையாக கையளித்து உழைக்கும் ஓர் அற்புத ஆசானாக அவரை நான் கண்டிருக்கிறேன். ஓர் நிகழ்விற்கான நாற்காலி தெரிவுசெய்வதில் இருந்து விருந்தினர் உபசரிப்பு நிகழ்ச்சிகளின் ஒழுங்கு, மாணவர் ஒழுக்கம் பேணல் என வரிசையாக ஒவ்வொரு விடயத்தையும் தெளிவாகவும் மிக நிதானமாகவும் கையாளுவதில் அவரிற்கு நிகர் அவரேதான்!

150 வருடகாலமாக நிலைத்துநிற்கும் இந்தப் பாடசாலைக்கே உரித்தான திருக்குடும்பத்தின் பாரம்பரியங்களை இங்கு கற்று வெளியேறும் மாணவரிடமே காண்பது அரிதாகிவிட்டநிலையில் பணிபுரிந்த இப்பாடசாலையின் பாரம்பரியத்தையும் பண்பாட்டையும் பேணியதுடன் அதை எமக்கும் சிறுபிசகின்றி கையளித்துள்ளார் எம் உப அதிபர். அத்துடன் ஒரு ஆசிரியரிற்கேயுரிய ஒழுக்கங்களையும் கண்ணியத்தையும் தன்னகத்தே கொண்டிருந்து அதே கண்ணியமான வாழ்க்கைமுறையை எமக்கும் பயிற்றுவிக்க அவர் தவறவில்லை.

இவ்வாறு தன் வாழ்வால் வழிகாட்டி என் போன்ற இன்னும் பல மாணவியரின் உள்ளங்களை ஆட்கொண்ட எம் உப அதிபரின் ஓய்வுக்காலம் இனிதாய் அமையவேண்டுமென உளமார இறைவனை வேண்டுகிறேன். மேலும் ஒரு ஆளுமைமிக்க பெண்ணாக சமூகத்தை எதிர்கொள்ளத் தேவையான சகல அறிவுரைகளையும், வழிகாட்டல்களையும் தந்து எனது சிறப்பானதோர் எதிர்காலத்திற்கான திறவுகோல்களையும் கரங்களில் ஒப்படைத்துச்செல்லும் அன்பின் உபஅதிபரை என் ஆயுள் உள்ள காலம் வரை நன்றியுடன் நினைத்திருப்பேன்...

ம.மரின் ரேச்சல்

மாணவத்தலைவி

க.பொ.த உயர்தரம் உயிரியல்(2017)










HOLY FAMILY CONVENT
DATE 16/6/2016
JAFFNA





## நெகிழ்வான கையசைப்பு

ஐம்பதாறாம் ஆண்டுதனில்
அன்னை தந்தையின்
அரும்பெரும் தவத்தால்
மண்மகிழ மாண்போடு
அவதரித்த மங்கை நீங்கள்
அகவை இருபத்தொன்றில்
மகத்தான பணியாம்
ஆசிரியப் பணி வாழ்வில்
அடியெடுத்து வைத்தீர்கள்
கொழும்புத்துறை இந்துமகாவித்தியாலயம்
ஈரிரண்டு வருடங்களோடு
ஏழரை மாதங்கள் உம்பணி கொண்டதன்று
மன்னார் மண்ணுக்கும் நீவிர்
மாண்போடு பணி செய்தீர்
வருடங்கள் ஏழோடு மாதங்கள் நான்கும்
உம் பணியெனும் மாதவம்
மன்னார் மண் கண்டது
அறப் பணி ஆற்ற மீண்டும் யாழ்மண்
அன்போடு அழைத்ததும்மை
மறை போற்ற யாழ்மண்ணில்
மகிமையுடன் நின்றிலங்கும்
எங்கள் கன்னியர் மடத்தில்
கனிவோடு கால் பதித்து
ஈர்மூன்று வருடங்கள் தாண்டி
ஈரைந்து திங்களும்
உங்கள் திறமையால்
திருக்குடும்பத்தை திகழவைத்தீர்
பண்போடு பயணித்த உம் பணியை
ஆண்டொன்று தாண்டி ஈரேழு நாட்கள்
ஆண்டாங்குளம் றோமன் கத்தேலிக்கப் பள்ளியூடாய்
முன்னார் மாதா மீண்டும் உடைமை கொண்டாள்
தோடர்ந்து திங்களொன்று தாண்டி மூவைந்து திங்கள்
முருங்கன் மகாவித்தியாலயம்
திறன்மிகு சேவையைத் தன் சொந்த என்றது
தொடர்ந்திட்ட உம் சேவையை
வருடங்கள் இரண்டொடு ஒன்றரை மாதங்கள்
பெரியமடு மகா வித்தியாலயத்திற்கு
முழுமையாய்க் கிடைத்தது
நீண்டு சென்ற உம்பணி
ஓரைந்து மாதங்கள் இருபத்துமூன்று நாட்கள்

மீண்டும் ஆண்டாங்குளத்திற்கு
அறப்பணிசெய்தது
தொடரந்து சென்ற உங்கள் புனிதப்பணியில்
தேவன்பிட்டிக்கும் தேவன்
உமையழைக்கத் தவறவில்லை
ஆண்டென்று தாண்டி
ஈர்மூன்று மாதங்கள் பதினெட்டு நாட்கள்
தேவன்பிட்டியில் நும்பணி செய்து நின்றீர்
அதன் தொடர்ச்சியாய்
வருடமொன்று இலுப்பைக்கடவையும்
அன்பான உம்சேவை அகமார கண்டது
இவ்வாறு ஏழு பள்ளிகளிலும
ஆழமான அறிவாலும் எளிமையான வாழ்வாலும்
ஊழமார பணி செய்து
இரண்டாயிரத்து இரண்டாம் ஆண்டுதனில்
மகிமையுற யாழ்மண்ணில்
கம்பீரமாய் நின்றிலங்கும்-எங்கள்
கன்னியர் மடத்தில்
உபஅதிபரென்னும் மணிமகுடம் தாங்கி
மீண்டும் கால் பதித்தீர்
உம் வரவால் மகிழ்ந்தோம்
உம் சொந்தங்கள் நாம்
ஈரேழு வருடங்கள்
உவகையுற பணி செய்தீர்
செல்வியே நீர் ஆனபோதும்
அவ்வப்போது அன்னையாய் வேடம் தாங்கி
அரும் பெரும் சேவை தந்தீர்
திருக்குடும்பத்தின் பாரம்பரியம்
பழுதின்றிக் காத்து நின்றீர்
எங்கள் கன்னியரின்
கண்ணியம் காத்துநின்று
கனிவான பணிசெய்தீர்
முகாமைத்துவப் பணி பலவும்
முன்னின்று நீர் செய்தீர்
இன்றைக்கும் ஆசிரியப்பணி செய்யும்
ஆணியினரில் பலர்
உம் பணியால் தம் பணி கொண்டவரே என்றால்
நிச்சயமாய் அது மிகையில்லை எனலாம்
கலைத்தளிரில் நீங்கள்
மகிழ்வான கையசைப்பு எனும் மகுடத்தில்
ஆழமான கவியொன்று
ஆளகாகத் தந்தீர்
நிறைவான பணிசெய்து
நிம்மதியாய்ச் செல்லும்
உம்மைப் பொறுத்தவரை
நிச்சயமாய் அது மகிழ்வான கையசைப்பே---------

செவ்விய சேவைத்திறன் கொண்ட மங்கையின்
பணிவாழ்விற்கு இன்னொரு விடை கொடுக்கும்
கன்னியர் மடத்தின் உறவுகள் எங்களுக்கு
சந்தேகம் எதுவுமின்றி சத்தியமாய் இது
நெகிழ்வான கையசைப்பே
நெகிழ்வான மனதோடு
விழியோரம் நீர் சொரிய
பிரிந்தும் பிரியாமல் - உமக்கு
பிரியாவிடை தருகின்றோம்
உங்கள் கனவுகள் கலையாமல்
எங்கள் கன்னியரை
கருத்துடன் வளர்த்தெடுப்போம்
கல்வியோடு கண்ணியமும்
கனிவோடு காத்து நிற்போம்
கலக்கமின்றிச் செல்லுங்கள்
ஓய்வினில் ஓய்வின்றி
வேறோர் நற்பணியில்
பயணிக்க இருக்கும்
உங்கள் பயணங்கள் முடிவதில்லை
எங்கள் வாழ்த்தும் இறைவன் ஆசியும்
என்றும் உம்மோடு இறுதி வரை கூடவரும் -

நன்றி

செல்வி மு. கவிதா

ஆசிரியர்

யா/திருக்குடும்ப கன்னியர் மடம்

## உன்னத அன்னையே எம் உப அதிபரே...

அன்பின் குணவதியே!
தமிழின் குலவிளக்கே!
ஈராறுவருடங்கள் உருண்டோடிப் பின்னும்
சளைக்காத உம் பணி!
அதன் சிறப்பால் பெரும் தருவென
கிளைபரப்பிடுவோம் நாம்!

குயில் போன்ற உம்முடைய
இன்னிசைக் குரல் கேட்டு
பள்ளிப் பூங்காட்டில் பூத்தோம் நாம்!
யாவரையும் உம் மழலையால் வசமாக்கி
காட்டினீர் எம் வெற்றியின் பாதைதனை
இனியதோர் தாய் போல...

வீரமங்கையே!
மாணவரெம் முன்மாதிரியே!
கல்விக்கு வயதில்லையென
கண்கூடாய் காட்டினீரே!
அன்னைபோல் எம் அனைவரின்
உணர்வையும் அறிந்தவரே...
பள்ளியதன் பண்பாட்டை
பறைசாற்றும் நிகழ்வுகளை
பாங்குடனே பயிற்றுவிக்க
உமையன்றி யார் இங்கே?

முதுமையிலும் இளமைகொஞ்சும்
முத்தமிழின் ஆசானே – நீர்
இப் பள்ளியெனும் பூங்காவை
விட்டு திரிந்து காற்றாக
புறம் பறந்து செல்கையிலே–உம்
கருணைசேர் வழிகாட்டல் - எம்
மனமெங்கும் நிறைந்திடுதே...

உம்போல நாங்களும் - உயர்
திருக்குடும்ப பண்புகளில்
என்றுமே நிலைத்துநின்று
அணையாமல் சுடர் பரப்ப
உளமார்ந்த ஆசிகளை
அள்ளி வழங்கிடுவீர்!

என்றும் எம் இதயங்களில்
உமக்கென்ற தனியிடத்தை
உன்னதமாய் செதுக்கியுள்ளோம்!
பிரிய மனமுமின்றி
விடைகொடுக்கும் தருணமிது..
மாண்புடன் தலைசாய்ப்போம்
மாணவத்தலைவியர் நாம்!

மாணவத் தலைவியர்
யா/திருக்குடும்ப கன்னியர்மடம்

# பிரியாமல் பிரிகின்றோம்

இறையேசுவின்
இனிய தொண்டு - இன்னும்
அழைப்பதால் தானோ
அகவை அறுபதும்
விரைந்தோடி வந்ததம்மா

பள்ளி மாணவியாய்
பாசமிகு ஆசிரியையாய்
உப அதிபர் என்னும்
உயரிய நாமம் உமது

பூபதி எனும் நாமத்தை அலங்கரிக்க
பெயருக்கு பதவி எனும்
பகட்டில்லை உம்மிடம்
பதவிசாய் பலநிமிடம்
பாயும் புலியாய் சில நிமிடம்
அன்புத்தாயாய் ஒரு கணம்
அரவணைக்கும் தோழியாய் மறு கணம்

பரிமள புஷ்பமாய்
பவனி வந்த திருக்குடும்ப
வாசல் எல்லாம் - உம்
அன்புக் கரங்களினால்
அள்ளிக் கொடுத்தவை எத்தனை

அழகு முகம் சிவந்தது
அகம்பாவத்தால் அல்ல
அவனியில் ஒரு சந்ததி
அழகு பெறச் செய்ய என
அகிலமே அறியும்

நேற்றுவரை நீரும்
நேர சூசியுடன் போராடி
கச்சிதமாய் அதனை முடித்துக்
கையில் ஒப்புவிக்கும் போது- விடும்
மூச்சுக்காற்றில் உமது கஷ்ரம் கரைந்தது

அகவை அறுபது என - நீரும்
அகமகிழ்ந்து கையசைப்பது
அகிலம் யாவும் அரண் செய்ய
ஒரு பொழுது இருப்பதால் தானோ
அம்மா நீயும் சுற்றி வாரும்
இப்பூமிப்பந்தை
அடங்கிப் போயிருந்த - உம்
அன்பு வெள்ளம் தேனருவி பொழிய
தரணியைத் தாங்கி வா ஒருகணம்
தவப்புதல்வியாய் நீரும்

இயலாமை என்பது
உமக்கில்லை கண்டீர்
இறைவன் படைப்பில்
இனிமைகள் காத்திருக்க
கலக்கமில்லை உமக்கு

இயற்கையை ரசித்திடும்
இறைவனின் படைப்புக்களை
கருணையுடன் நோக்கிடும்
கலைமகளும் உம்மோடு
கதைகள் பேசி லயித்திருப்பாள்

கானக்குயிலாய்
கவி மழை பொழிந்திட
கட்டற்று உம் நெஞ்சில்
கவிபாட கிடந்தவற்றை
ஒப்புவியும் இப்புவிக்கு

பிரியாவிடை ஒன்று
நாம் கூறவில்லை
எம் நெஞ்சொடு நீர் வாழ
பிரிவென்று ஒன்றுண்டா
போய்வாரும் தாயே- நீரும்
இப்புவியில் தொண்டாற்ற

கு. ஆனந்தநடராஜா
ஆசிரியர்
யா/திருக்குடும்ப கன்னியர்மடம்

# “பெனடிக்ற் மிஸ்”

2006 பாடசாலைக்குள் புதிய இளம் ஆசிரியையாக எனது காலடி,
கண்டிப்புடனும் கர்வத்துடனும் பழைய ஆசிரியர்கள் குழாம்,
அங்கும் இங்கும் சமாளிக்கத் தெரிந்த சிறிய உருவம் கண்டேன்.
இளம் ஆசிரியர் மட்டத்திற்குள் ஓர் சலசலப்பு,
திரும்பினேன் அங்கு “பெனடிக்ற் மிஸ்”.
காலப்போக்கில் பயத்துடன் கூடிய மரியாதை,
கனிவாகப் பேசிப் பழகும் இன்முகம்.

நிர்வாக செயற்பாடுகளில்
நேர்த்தியான, திறமையான,
சிறப்பான முடிவுகளின் பங்குதாரர்.
மாணவர்களின் மனநிலைக்கேற்ற கண்டிப்பு
பின் அரவணைத்து பாடம் புகட்டும் பண்பு
கற்றல் செயற்பாடு ஒப்புமையற்றது.
தமிழ் ஆசிரியரின் தனித்துவத்தை
உடன் பொழியும் கவி மழையில் கண்டு களித்தோம்.

உப அதிபராகிய பின்னரே
அறிமுகமானவர் எனக்கு
அலுவலக கடமைகளின் நிமித்தமும்
நேரசூசி தயாரிக்கும் வேளைகளிலும்
சிக்கலின்றி நேரசூசிதனை
தரம் பிரித்து சீராக கொடுக்கும் கலையே
ஒரு தனிக் கலைதான்.
நேரசூசிக் கலையை

விரல் நுனிப் பயிற்சியாக்கி

என் பணி எளிதாக்கினீர் வாழி.

அலுவலக காரியம் வீட்டிலும் பார்க்கும்

நேர்த்தி கண்டு வியந்து நின்றேன்.

காலநேரம் பாராது எந்நேரமும்

பாடசாலையில் கண்டேன் அவர் சேவையை.

நேர்த்தியிலும் சேவையிலும்

அதிபர் ஆசிரியர்களின் மனம் கவர்ந்தவர்.

நன்றி நவிலுகின்றேன்

இன்று போல் எந்நாளும்

இன்முகத்தடன் வாழ்க.


திருமதி. இவோன் தமிழினி ஜேம்ஸ் மைக்கல்

ஆசிரியை,

யாழ். திருக்குடும்ப கன்னியர்மடம்.








# கவிமழைக்கு ஓய்வில்லை

நூல் தோறும் கவிநயம்
நாம் காண்பது போல
சொல் தோறும் கவிமழை
பொழிய கண்டு மெய்மறந்தோம்

வற்றாத ஜீவ நதிகளுமுண்டு
தடையில்லா உரை மழை
சிந்தக் கண்டு நாம்
அதிசயம் கொண்டு நின்றதுமுண்டு

பேச்சினிலே பணிவினைக்கண்டு
மூச்சினிலே பணியைக்கண்டு
நடையிலே மிடுக்கைக் கண்டு
உடையினிலே நேர்த்தி கண்டுகளித்தோம்

பென்னம் பெரிய பிரச்சினை வந்தாலும்
சின்னுஞ் சிறியதாக்கித் தீர்ப்பீர்
வழிகாட்டும் ஆசானே நீர்
நீடுழி வாழ்க பல்லாண்டு காலமே

திருமதி. சதாறூபினி சிறீகந்தராஜா
ஆசிரியர் யா/திருக்குடும்ப கன்னியர்மடம்



# திருக்குடும்ப பாரம்பரியத்தின் "மாதிரி"

# செல்வி மேரி பூபதி பெனடிக்ற்

திருக்குடும்ப கன்னியர் சபை இலங்கைக்கு வந்து சிறப்பான பணிகளையும் பண்புகளையும் முன்னுதாரணமான வாழ்வு, மூலம் வெளிப்படுத்தியதன் விளைவாக இங்கு ஒரு புதிய பாரம்பரியம் உருவாகியது எனலாம். அவர்கள் பொறுப்பேற்ற திருக்குடும்ப கன்னியர் மடம், பெண்களுக்கான புதிய கல்விப் பாரம்பரியத்தினை மட்டுமன்றி பண்பு நலன்மிக்க, பெண்களுக்கான கலாசாரத்தினையும், ஆன்மீக ஒழுக்கத்தினையும் பதிவைத்து உருவாக்கினர் என்று கூறலாம். ஆதித்தாய்மார் என அழைக்கப்படுகின்ற மூத்த அயர்லாந்து கன்னியர்கள் உருவாக்கிச் சென்ற அந்த பாரம்பரியத்தின் எச்சங்களாக இன்றும் நிற்பவை திருக்குடும்ப கன்னியர் மடப் பாடசாலையும் அங்கு கற்ற மாணவப் பரம்பரையும் எனலாம். இன்றும் இப் பாடசாலையில் அப்பாரம்பரியங்களை நீட்சி பெறச் செய்பவர்கள் இங்கு கற்று, பின்னர் இங்கு கற்பித்தல் தொழில் செய்து வருகின்ற ஆசிரியர்கள் என்பது மறுக்க முடியாத உண்மையாகும் . இப்பாரம்பரியத்தின் இறுதிச்சுவடாக கொள்ளப்படக் கூடியவர் செல்வி மேரி பூபதி பெனடிக்ற் ஆவார். கடந்த ஒரு தசாப்த காலத்திற்கும் மேலாக அவரை கண்டு பாவித்து வந்த அனுபவத்தின் சில பதிவுகளை இக்கட்டுரையில் முன்வைக்க விரும்புகின்றேன்.

**தமிழ் பற்று மிக்க ஆசிரியர்**

எமது உப அதிபர் செல்வி பூபதி பெனடிக்ற் அவர்கள் தமிழ் பாடத்தினை கற்பிப்பதனையே அதிகம் கண்டுள்ளேன். தமிழ் மொழியிலும் இலக்கியத்திலும் அவர் அலாதிப்பிரியங்கொண்டவர். மாணவர்களின் சுய கற்றலில் அவர்களை அதிகம் உற்சாகப்படுத்துவார். வாசிப்பு நூலகப்பாவனை படைப்பாக்கங்கள், என்று அவர் மேற்கொண்ட முயற்சிகள் ஒவ்வொன்றும் முற்போக்கான சிந்தனைச் செயல் வடிவங்களாக இருக்கும். மாணவர்களுக்கு கவிதைப் போட்டிகளை நடாத்தி அவற்றில் நல்லவற்றை காட்சிப்படுத்தி ஆக்க சிந்தனைகளை முன்வைத்து நிற்பார். அவருக்குள் ஒரு கவிஞன் வாழ்கின்றான். காலைச் சிந்தனைகளிலும் இடைவேளை நிறைவிலும் அவர் மாணவர்களிற்குச் சொல்லும் அறிவுரைகள் கவிதைகளாக மாறும் அவ்வாறே சிறப்புமலர்களில் அவர் எழுதுகின்ற ஆசிச் செய்திகள் ஒவ்வொன்றும் ஆழமான சிந்தனைகளை கொண்டதாகவும் கவித்துவம் மிக்கவையாகவும் காணப்படும். முத்தமிழ் விழாவை நடத்துவதிலும் அவர் எடுத்துக்கொள்ளும் பிரயாசை அபரிதமானது. அவர் முத்தமிழ் மனதிற்கு பொறுப்பு வகித்தகாலம் பொற்காலம் என்று கூறமுடியும். அவர் உப அதிபராக பணியேற்த்தான் பின்னருங்கூட முத்தமிழ்விழா சிறப்பாக நடைபெறுவதிலும் அதன் நிகழ்வுகள் ஒவ்வொன்றும் கலைத்துவமாய் ஒழுங்குபடுத்தப்படுவதிலும் அரங்கப்பாவனையில் செய்நோர்த்தி ஏற்பட வேண்டுமென்பதிலும் அவர் கவனம் செலுத்துவார். முத்தமிழ் மனத்தினால் 'கலைத்தளிர்' உருவாக்கப்பட்டபோது. அதன் சிறப்பான வருகைக்கு அவர் வழங்கிய ஆலோசனை கள் இன்றும் அம்மலரை நடத்துவதற்கு துணை செய்கின்றன. நாடகப்போட்டிகள், நாட்டுக்கூத்துப் போட்டிகளில் நான் மாணவர்கரைப் பயிற்றுவிக்கும்போது எனக்கு அவர் தருகின்ற ஊக்கம், உண்மையில் பெருந்துணையாக இருக்கும். போட்டிக்கு முன்னர் அதனை பார்வையிட்டு அக்கறையோடு அதில் காணப்படும் குறைநிறைகளை எடுத்துச் சொல்லி வழிப்படுத்துவார்.

இவ்வாறு தமிழிலும, இலக்கியத்திலும், கலைகளிலும் ஆர்வங்கொண்ட கலைஞராக அவரை நாம் தரிசித்தோம். இத்தகைய ஊக்கங்களின் பின்னணியை நோக்கும் போது அவர் ஒரு கலைக் குடும்பத்தில் பிறந்ததும், வளர்க்கப்பட்டதும். திருமறைக்கராமன்றத்தில் ஆரம்ப காலத்தில் பங்களித்ததும் என பல விடயங்களை ஊகிக்க முடியும். திருக்குடும்ப கன்னியர் மடத்தில் ஒரு கலைப் பாரம்பரியம் நீட்சி பெற்றதற்கு இவரது பங்களிப்பு பக்கபலமாக இருந்ததென்பது பதிவு செய்யப்பட வேண்டியதே.

**திருக்குடும்ப பாரம்பரியத்தின் தீவிர பற்றாளர்**

திருக்குடும்ப கன்னியர் மடத்தின் (ஆங்கில) பழைய மாணவியாக இருந்து, பற்றோடு கற்பித்தல் பணியில் ஈடுபட்ட, அருட்சகோதரிகளிடமும், ஆசிரியர்களிடமும் கல்வி கற்றதன் பயனாக திருக்குடும்ப கன்னியர்மடப் பாடசாலையின் ஒவ்வொரு பாரம்பரியங்களும் அவருள் பசுமையுடன் வாழ்ந்து கொண்டிருக்கிறது. அதனால் அதனை நீட்சி பெறச் செய்வதில் அவர் ஒரு தீவிரவாதியாகவே இருப்பார். பாடசாலையின் ஒழுக்கத்திலும், ஒழுங்கான நகர்வுகளிலும் ஒவ்வொரு செயற்பாடுகளிலும், குறிப்பாக மாணவர்களின் ஒழுக்கத்திலும், ஆன்மீகத்திலும் திருக்குடும்ப பாரம்பரியம் நிலைநாட்டபட வேணடும் என்பதில் கண்ணும் கருத்துமாக இருப்பார். இரண்டு கன்னியர் மடங்களும் இணைக்கப்பட்டதன் பின்னர் அப்பாரம்பரியத்தினை நிலைநிறுத்துவதில் அதிபர்கள் பெரும் சவால்களை எதிர்கொண்ட போது அவர்களுக்கு துணையாக நின்று உதவினார். ஒவ்வொரு புதிய அதிபர்களும் வரும் போது அவர்களுக்கு பாரம்பரியத்தினை உணர்த்துவதிலும் அவர்களினூடாக பாரம்பரியம் நீட்சி பெறச் செய்வதிலும் பெருந்துணையாக இருந்தார். பாடசாலைக்காக உண்மையுடன் உழைக்கும் ஒவ்வொருவரையும் அவர் அதிகம் நேசித்தார். அவர்களின் நன்மை தீமைகளில் கலந்து கொள்வது முதல், அவர்களின் பிரியாவிடைகளை உணர்வுபூர்வமாக நடத்துவது வரை முன்னின்று செயற்பட்டார்.

திருக்குடும்ப பாரம்பரியம் சிதைவுறும் சந்தர்ப்பங்களில் உப அதிபர் சினத்துடன் தான் அதனை எதிர்கொள்வார். அதனை ஏற்றுக்கொள்ளாத அகச்சீற்றம் அவரிடம் எப்போதும் காணப்படும். இன்று புதிய ஆசிரிய சமூகமும், பாடசாலையில் பெரும்பான்மையாக இருக்கும் சூழலில் அவர்களில் திருக்குடும்ப பாரம்பரியம் நிலைபெற வேண்டும் என்று விரும்புவார். அது நடைபெறாக போது அவரது அகச்சீற்றம் வெளிப்படும். அவரை புரிந்து கொள்ளாதவர்கள் அவருடன் முரண்பட்ட சந்தர்ப்பங்களும் உண்டு. ஆனால் பெறுமதி மிக்க திருக்குடும்ப பாரம்பரியம் நிலைபெற வேண்டுமாயின் அவரது அணுகுமுறை, அத்தியாவசியமானதாக உணரப்பட வேண்டும்.

**திருக்குடும்ப வரலாற்றுத் தகவல்மையம்**

திருக்குடும்ப கன்னியர் மடத்தின் 170 வருட வரலாற்றுச் சுவடுகளில், அதன் அதன் வரலாற்றை கூறவல்லவர் யாருமில்லை என்றே கூறலாம். உபஅதிபர் செல்வி. பூ. பெனடிக்ற் அவர்களே பாடசாலையின் வரலாறு முற்றும் தெரிந்த இறுதி ஆசிரியர் எனலாம். இங்கு கற்று, கற்பித்து, பாரம்பரியம் மிக்க அதிபர்களின் சுவடுகளை கண்டு பாவித்து வந்ததன் விளைவாக இப்பாடசாலயின் வரலாற்றை கூற வல்லவராகவும், மூத்த மூலவர்களை இனங்காட்ட வல்லவராகவும் இவரே திகழ்ந்தார். இன்றும் வாழ்கின்ற பழைய மாணவிகள் பலரை அவருக்கு மட்டும்தான் தெரியும் என்ற நிலை. அந்தளவிற்கு எமது பாடசாலையின் வரலாற்றை நன்கறிந்தவராகவும், வரலாற்றுச் சுவடுகளை இனங்காட்ட வல்லவராகவும் திகழ்ந்தார். ஓய்வு பெற்ற அதிபர்களான, அருட்சகோதரி யோலன்ட் மத்தியாஸ் அவர்களின் பிரியாவிடை மலரான 'மாண்மலர்', அருட்சகோதரி தஸ்நெவிஸ்லடிஸ்லாஸ் அவர்களுக்கென வெளியிட்ட 'புலர்வு', அருட்சகோதரி தயாநாயகி செபமாலைக்கென வெளியிடப்பட்ட 'தயாளம்' ஆகிய இதழ் உருவாக்கங்கள் ஒவ்வொன்றிற்கும் வழிகாட்டியாக அவரே திகழ்ந்ததுடன் அம்மலர்களில் ஒவ்வொரு அதிபர்களும் செய்த வினைத்தின் மிக்க பணிகளை நீண்ட கட்டுரைகளாக வரைந்துள்ளார். இவ்வாறு திருக்குடும்ப கன்னியர் மடத்தின் வரலாற்று மையமாக விளங்கிய இவரின் ஓய்வு பாடசாலைக்கு பேரிழப்பாகும்.

**உன்னதமான உப அதிபர்**

இவை மட்டுமன்றி, மூன்று அதிபர்களின் கீழ் உப அதிபராக செயலாற்றிய இவரது நிர்வாகத்திறனும், ஆளுமையும் விதந்துரைக்கத்தக்கது. அதிபர்களின் நிர்வாகத்திற்கு உற்ற துணையாக நிற்கின்ற அதே வேளை, அவர்கள் திருக்குடும்ப பாரம்பரியத்தை மீறிச் செயற்படும் போது சுட்டிக் காட்டுபவராகவும் செயற்பட்டார். அதிபர்கள் இல்லாத போது நிர்வாகத்தினை சிறப்பாக இயங்க செய்ய வல்லவராக இருந்தார். நேரசூசிகை தயாரித்தல் என்ற கடினமான பணியை தானே

தொடர்ந்து மேற்கொண்டு வந்தார். அதிபரையும் ஆசிரியர்களையும் ஒன்றிணைக்கின்ற பாலமாக பாடசாலையில் தொழிற்பட்டார். எல்லாவற்றிற்கும் மேலாக பாடசாலையின் விளையாட்டு மைதானத்திற்காக காணிக் கொள்வனவு செய்வதற்கு முழு மூச்சாக செயற்பட்டார். இவ்வாறு திருக்குடும்ப பாரம்பரியத்தை நீட்சி பெற செய்வதில் அவரின் உபஅதிபர் பணி மகத்தானதாக காணப்பட்டது.

21 வருடங்களை இந்தப் பாடசாலையினால் தன்னைக் கரைத்துக் கொண்ட எமது உபஅதிபர், செல்வி மேரி பூபதி பெனடிக்ற் அவர்களின் பணிக்காலம் பாடசாலையின் மகத்துவமான காலம், தொன்மைமிக்க திருக்குடும்ப பாரம்பரியத்தின் விழுதாக உருவாகி விருட்சமாக நின்று பாடசாலைக் கப்பலை இலக்கை நோக்கி இயங்க வைக்கும் தூண்டியாக தொழில்பட்ட அவரது அர்ப்பணிப்புமிக்க பணிகள் காலம் கடந்தும் வாழ்பவை. அவரை கண்டு பாவித்து, உரையாடி, அவருடன் கழித்த காலங்கள் நிச்சயமாக எமது ஆசிரியப் பணிகளில் பசுமையாக நின்று வழிகாட்டும் என்பது உறுதி.

தாயே.....
திருக்குடும்ப கல்விக் களத்தில்
களைப்பின்றி உமைக் கரைத்தீர்
கண்ணியமாய் பணி செய்தீர்
கல்வியையும் கருத்தையும்
குறைவின்றி கொடுத்தீர்
ஆதித்தாய்மாரின் சுவடுகள் வாழ
அன்றாடம் உழைத்தீர்
அதிபர்கள் அருகே
அன்போடு பணி செய்தீர்
அல்லன கண்டு அகச்சீற்றம் கொண்டீர்
அவை அனைத்திலும்
உங்கள் அர்ப்பணத்தைக் காண்டோம்
அவ்வழி எங்களுக்கும் "மாதிரி"
அன்போடு விடை தந்தோம்
ஆயுளும், ஆரோக்கியமும்
அகத்திலே அமைதியும்
ஆண்டவனார் தந்திட
வேண்டி விடைதந்தோம் நன்றியுடன்.

யோ. யோண்சன் ராஜ்குமார்
ஆசிரியர்
யா/ திருக்குடும்பக் கன்னியர்மடம்




2015







**நன்றிகள்**...............

21 வருடங்கள் எம்முடன் பணி செய்த எமது உப அதிபர் செல்வி. மேரி பூபதி பெனடிக்ற் அவர்களின் சேவை நயப்பு மலராகிய இப் "பூமகள்" மலருக்கு மனமுவந்து வாழ்த்து, ஆசிச்செய்திகளையும், ஆக்கங்களையும் தந்தவர்களுக்கு எமது மனப்பூர்வமான நன்றிகள்.

------- பாடசாலைச்சமூகம் -------



HOLY FAMILY CONVENT
DATE 16/6/2016
JAFFNA



"Glory to God Alone"